# தென்மொழி

## உழைப்பை அவமதிக்கும் செயல்!

உழைப்பதிகம் காண்கின்ற முன்னேற்ற நாடுகளில்
பருவமழை உதவா விட்டால்,
தழைப்பதிகம் காண்கின்ருர் அறிவியலால்! விளைவங்கே
முப்பொழுதும் தளிர்க்கச் செய்வார்!
பிழைப்பதிகம் இல்லாத வறுமைமிகும் இந்நாட்டில்
புனிதமெனும் பெருமை பேசி
மழைப்பதிகம் பாடுகின்ருர்! மந்திரத்தை ஓதுகின்ருர்!
உழைப்பை அவ மதிக்கின் ருரே!

குடுமியெலாம் ஒன்றிணைந்து நீர்புகுந்து குளத்தவளை
போல்வேதக் கூச்ச லிட்டால்,
கிடுகிடென மழைபொழியும் எனநினைந்து வான்நோக்கும்
முழுமூடக் கீழ்மை யோரே,
அடுமழைதான் பொழிந்தாலும் விளைந்தாலும் செல்வர்களால்
ஏழையர்க்கிங் காவ தென்ன ?
'படுமின்'என இயற்கையதே நெறிபிறழ்ந்த நும்போக்கை
மழைகரந்து பழித்தல் கண்டீர்!



ஆசிரியர்
**பெருஞ்சித்திரன்**

சுவடி: 12. ஓலை: 5. விலை: ஓர் உருபா.

# நமக்கு வந்த மடல்கள்

**0 : 436:** பெருந்தகையீர்! தென்மொழித் தாளிகையைத் தெரியாமல் தின்றுவிட்ட கழுதைக்கும் ஒருவகை உணர்வு பிறக்கும். ஆனால் என் மொழியார்க்கும் என் இனத்தார்க்கும் என்று பிறக்குமோ தமிழுணர்வு? ஐயகோ! முடை நாற்றக் குப்பையிலே புரண்டு அரசியற் சாய்க்கடையிலும், திரைப்படக் கழிவுகளிலும் தங்கள் மனங்களை அன்றாடம் அலசிப் பிழிகின்ற உடலங்கள் இந்நாட்டிலுள்ள வரையில், தாங்கள் தென்மொழி வாயிலாக வெளியிடும் உணர்வுக் கருத்துகள் வயிர ஊசிகளாகச் சென்று தமிழர் நெஞ்சங்களைத் தைக்கின்ற போழ்தும், அசைவுறு அடிமரங்களாய்த்தாம் நிற்பர். இந்நாட்டுக்காக நாட்டு மக்களுக்காக நடுத்தெருவிலே வந்து தூக்கிலே தொங்கினாலும் ஏனென்று கேட்கமாட்டார்கள்! அந்த அளவுக்கு அடிமை மனமும் வஞ்ச நெஞ்சுங்கொண்டு தன்னலப் பாறைகளாக விளங்குகிறார்கள்.

இந்நிலையில், தாங்களோ திருவல்லிக்கேணியிலே அமர்ந்து கொண்டு, தெருத்தூற்ற ஊர் தூற்ற வாழ்கின்ற உதவாக்கறைகளையெல்லாம் எண்ணியெண்ணி இன்னும் ஓலமிடுகின்றீர்கள். ஏட்டை எவன் பார்த்தான்? பாட்டை எவன் படித்தான்? எல்லாம் கோட்டை கொடிமரம், கொக்கரிப்பு வீணான ஆர்ப்பரிப்பு, காம வேட்டை, களியாட்டம், கள்ளக்கடத்தல், ஏய்ப்பு, ஏமாற்று என்றே வாழுகிறார்கள். நல்லதொரு வினையை ஒருவன் நாடிச்செய்தாலும் இதில் சொட்டை அதில் சொள்ளை என்று ஏதேதோ உளறிக் கொண்டு கோபுரத்தில் ஏறிக்கொண்ட நினைப்பில் முறுக்கிக்கொண்டிருக்கிறார்கள். என்னே தமிழர் நெஞ்சு! எரிகிறதையா என்நெஞ்சு! ஏற்ற வினையாதோ? —இலக்கியன், புதுவை-1.

**0 : 437:** நமது நோக்கமாகிய இன, மொழி, புலம் விடுதலைக்கு நாம் இப்போது ஆற்றும் செயல் குழந்தைகள் கூட்டாஞ்சோறு ஆக்கும் அளவினதாக இருப்பதாகவே எனக்குப் படுகிறது. ஏனெனில் நான் உயிர் நீப்பதற்குள் விடுதலையைப் பார்க்கவேண்டும் என எண்ணுகிறேன். அவ்வளவு ஏன்? பிறந்தபோதுதான் தளையோடு பிறந்தேன். இறப்பாவது விடுதலை மண்ணில் நடக்கட்டுமே என்ற ஓர் எண்ணம் எனக்கு. விடுதலை உணர்வை எங்கணும், எவரிடமும் ஊட்ட நாம் விரைந்து செயல்படவேண்டும். அதற்கு முதலில் "தென்மொழி"யைக் கிழமை இதழாக்க வேண்டும். அடுத்து நமக்கு என ஒரு நாளிதழை ஏற்படுத்தவேண்டும்,

இதற்கு என்னால் ஆனவை அனைத்தும் செய்ய அணியமாய் உள்ளேன். மேலும் ஐயா அவர்கள் எதையும் பாராமல் ஆங்காங்குக் கல்வி நிலையங்கள் தொடங்கி, ஏழை மக்கள் உள்ள பட்டிகள் வரையில், எளிய, வன்மையான கரணியங்களைக் காட்டித், தொடர்ந்து சொற்பொழிவு ஆற்றவேண்டும். பேச்சாளர்கள் பலரை உருவாக்க வேண்டும். ஊருக்கு ஊர் அன்பர்களை அணியில் சேர்த்து மன்றங்களையும் கொள்கைகளையும் விரிவாக்கவேண்டும். செலவிற்கு (தமிழுக்காக) நன்கொடைப் பொத்தகங்களை வெளியிடவேண்டும். என்போன்றவர்கள் பொருள் தண்டிக்கொடுக்க அணியமாக உள்

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம் பார்க்க)

# விரைவில் சென்னைத் தெருக்களில் தமிழ் முழக்கம் கேட்கும்!

## மாணவர்கள் கிளர்ந்தெழுந்தனர்!

"மூன்று திங்களுக்குள் சென்னை அண்ணா சாலையிலுள்ள அனைத்துக் கடைகளும் தங்கள் பெயர்ப் பலகைகளில் தமிழுக்கு முதலிடம் கொடுத்து மாற்றியமைக்கவேண்டும்"

—என அனைத்துக் கல்லூரி மாணவர் தமிழ்ப் பேரவை கடைகாரர்களுக்கும் வாணிகர்களுக்கும் அறிக்கை கொடுத்துள்ளது:

அதில் "தமிழகக் கடைத்தெருக்களில் உள்ள பெயர்ப் பலகைகளைக் காணும்போதெல்லாம், இது தமிழ் நாட்டில் உள்ள கடைத் தெருவா, அன்றி நாம் ஏதானுமோர் அயல்நாட்டுக் கடைத்தெருவில் இருக்கிறோமா என்னும் ஐயம் எங்கள் உள்ளத்தில் ஏற்பட்டு அதனால் ஏற்பட்ட மான உணர்வும், உரிமை வேட்கையும், கடமைத் தூண்டலும் எங்களை இம்முயற்சியில் ஈடுபடுத்தின. ஆகவே, இவ்வேண்டுகோளை அன்புடனும், அடக்கத்துடனும், நம்பிக்கையுடனும் விடுக்கின்றோம்."


"உடனடித் திட்டமாக சென்னை மாநகரின் அண்ணா சாலையில் பெரியார் பாலத்திலிருந்து அண்ணா மேம்பாலம் வரையில் இருமருங்கும் உள்ள கடைகளில் உள்ள பெயர்ப் பலகைகளை முதலில் (தலைப்பில்) தமிழிலும், தேவையானால், இரண்டாவதாக ஆங்கிலத்திலும், தேவையானால் மூன்றாவது நிலையில் நீங்கள் விரும்பும் பிற மொழியிலும் முறையே 5 : 3 : 2 என்னும் விழுக்காட்டளவில் எழுத்துக்களை அமைத்து எழுத வேண்டுகின்றோம். நீங்கள் தமிழராயினும் பிறராயினும் எங்கள் தமிழ் உணர்வை மதிப்பீர்களென்றும், இழிவு படுத்தமாட்டீர்களென்றும் நம்புகின்றோம். ஆகவே, மூன்று திங்களுக்குள், அஃதாவது 1975-ஆம் ஆண்டு சூன் திங்களுக்குள் தங்கள் நிலையப் பெயர்ப் பலகைகளை மாற்றி, நாங்கள் கல்லூரிகள் திறக்கப் பெற்று மீண்டும் வரும்போது அண்ணா சாலைக் கடைகளெல்லாம் தமிழ்ப் பெயர்ப் பலகைகளை மேற்கண்டவாறு பெற்றிருப்பதைக்காண விரும்புகின்றோம்.—இங்ஙனம் அனைத்துக் கல்லூரி மாணவர் தமிழ்ப் பேரவை, சென்னை"—என்று அறிவிக்கப்பெற்றுள்ளது.

மதுரையிலும் இதுபோன்றதொரு முயற்சி கடந்த மூன்று நான்கு மாதங்களுக்கு முன்னர் நடந்தது. வரும் ஏப்ரலிலும் கோவையில் இதுபோல் ஒரு முயற்சி நடக்கவுள்ளதாக அறிவிக்கப் பெற்றுள்ளது. சென்னை மாணவர் பேரவையும் இம்முறையைப் பின்பற்றுவது மிக்க மகிழ்ச்சி தருவதாக உள்ளது. இம்முறையை இனி ஆங்காங்குள்ள தமிழன்பர்களும் மாணவர்களும் மேற்கொள்வார்கள் என்று நம்புகின்றோம்.

வாழ்க தமிழ்!

வெல்க மாணவர் தமிழ்ப் போராட்டம்!

" கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை " எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!



# தென்மொழி

இலக்கிய இதழ்

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

சுவடி: 12, ஓலை: 5.

கும்பம்.-மீனம்.-தி. பி. உயிஉசு-(மார்.-'75-ஏப்.-'1975.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

## நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல் களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடு பட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

# தாறுமாறான தமிழியக்கங்கள் 1



ஓரினம் மறுமலர்ச்சியுற்று எழுங்காலைப் பற் பல இயக்கங்கள் தோன்றுவது தவிர்க்க முடியாதது; அது வரலாறு. தமிழினம் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகத் தன் மொழியையும் இனத்தையும் நாட்டை

யும் பண்பாட்டையும் அரசியலையும், பேணிக்கொள்ளவும் காத்துக் கொள்ளவும் அறியாமலும் இயலாமலும் இருந்து, கடந்த நூறுண்டு களாக மொழியுணர்ச்சியும் இன வுணர்ச்சியும் பெற்று, உலக இனங்களோடு, தன்னை ஒப்பவைத்துக் கொள்ளவும் தக்க வைத்துக் கொள்ளவும், அரும்பாடு பட்டு வருகின்றது. இவ் வடிப்படையில் ஆங் காங்கே பல்வகையான எழுச்சிகள் தோன்றுவதும், இயங்குவதும், அவற்றுள் பற்பல சிதைந்து வீழ்வதும், சிற்சில அதைந்து வாழ்வதும் தவிர்க்க வியலாத இயற்கையான படிநிலை வளர்ச்சிக் கூறுபாடுகள் ஆகும்.

இருப்பினும், இவ்வாறு தோன்றுதலும் மாறுதலும் மடிதலும் செய்கின்ற எழுச்சிகள்-இயக்கங்கள்-ஒருவகையான அறிவுநிலைப் பொருத்தத்தோடும், பொதுநிலை உணர்வோடும், அதர்ந்தெழும் முயற்சியோடும் இயங்கத் தொடங்கின், தோற்றங்கள் பலவாருக இருக்கத் தேவையில்லை. முயற்சிகளும் வீணுகக் கரணியமில்லை. அவ்வாறின்றி, பொதுவுணர்வெழுச்சியோடு இயங்க எண்ணித் தொடங்கும் இயக்கங்கள், இடையிடைப் பல தந்நலவுணர்வுகளால் தடைப் படுத்தப் பெற்றும், திசைமாற்றப் பெற்றும், கொள்கை திரிக்கப் பெற்றும், கூறு சிதைக்கப் பெற்றும், மாறு பட்டும், வேறு பட்டும், அழிக்கப் பெற்றும், ஒழிக்கப்பெற்றும் போவதை எண்ணத் தொடங்குகையில்தான், என்னே, இத்தமிழர்களின் உணர்வுப் பிதுக்கம் இருந்தவாறு, என்று இரங்கவும் ஏங்கவும் வேண்டியுள்ளது.

ஒருமுகப் பட்டு, ஒரு முனைப்போடு எழும் ஓர் இயக்கம் இடை முறிதலும் எழுச்சி நெரிதலும் பெறுவானேன் என்று எண்ணிப் பார்ப்போமாஞல், இறுதியில் அங்குத் தந்நலக் கூறுபாடுகளும் பொருள் நசைகளும், பொருமைப் புகைச்சல்களும், புகழ்ப் புழுக்கங் களும்தாம் எச்சங்களாக நிற்கும். இவை ஒரு சிலருக்குத்தாம் உரி யவை என்றில்லாமல், அனைவருக்குமே பொதுவான மாந்த அழுகல் உணர்வுகள். ஓர் இயக்கத்தின் கீழ்நிலைத் தொண்டனுக்கு உள்ள இவ் வகையான உணர்வெழுச்சிகள், ஒரு மேனிலைத் தலைவரையும் ஆட்டிப் படைக்கின்ற சல்லிவேர்களாக அமைந்திருப்பதைப் பார்க்கலாம். இது மாந்த வியற்கை. ஆனாலும் மனவுணர்வுகளும் அறிவுணர்வுகளும் பூதநிலை வெளிப்பாட்டு உணர்வுகளும் பொருள்நிலை இயக்கக் கூறு பாடுகளும் இவை இவை என்று வேறு பிரிக்கத் தெரிந்த மெய் யுணர்வு கைவரப் பெற்ற ஒரு கூறிஞர்க்கன்றிப், பிறர்க்கு அவற் றின் பிறழ்ச்சி நிலைகளைக் காணுவதும், கண்டு விலகுவதும் இயலாது என்க. "ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே, மெய்யுணர் வில்லா தவர்க்கு, "என்றும்," எனவகையான் தேறியக் கண்ணும்

வினைவகையான் வேறாகும் மாந்தர் பலர் என்றும் கூறிய திரு வள்ளுவ மந்திர வுண்மைகளும் இதனையே நிலை நிறுத்தும்.

இவ் வியக்க வுறுப்புநிலைகளை ஒவ்வொருவரும் பட்டறிந்தே உணர்தல் இயலும். எத்துணையாய் எடுத்துச் சொல்லினும் ஒருவர் அறிவிற்கு இவை ஏறுதலும், உணர்வில் இவை ஊறுதலும் இயலா. எனவேதான், இவ்வுலகின்கண் தோற்றுவிக்கப்பெறும் எந்த இயக் கத்தினும், நடைமுறை மாறுபாடுகளும் வேறுபாடுகளும் இடையறாமல் நிகழ்ந்து கொண்டே உள்ளன. தாம் பெறும் பிள்ளைகளே, குழவிப் பருவத்து, அழகும் இனிமையுமா யிருந்து, முகிழ்க்கும் உணர்வுப் பருவத்து, மாறுபட்டும் வேறுபட்டும் போவதும், சிற்சில கால் தாம் எதிர்பாராதவாறு அறக் கொடுமையாளராய்ப் புறத்திரிபுற்றுப் போதலும், அவற்றைப் பெற்ற தாயார்க்கே யன்றி மற்றையோர்க்கு விளங்காதன்றோ? இவ்வாறு தன்னுணர்வினதாகிய உயிர்ப் பிறவி களின் இயக்கங்களே மாறுபாடடையும் பொழுது, பல்வகை உயிர்-கள் சேர்ந்து இயங்கும் ஓர் இயக்கம் மாறுபாடுறாது இருக்குமென்று எவரும் எதிர்பார்க்க வியலாது. எனவே, கூடியமட்டில் நம் இயக்கங் களை ஒருவகைக் கட்டறுப்பு நிலைக்குத்தான் வடிவமைக்க முடியும் என்க. அந்தக் கட்டறுப்பு நிலை எவ்வகையில் அமையலாம் என்பது பற்றி இங்கு ஒருவாறு எண்ணிப் பார்ப்போம்.

ஓர் இயக்கம் முதற் சிதைவுறுதற்குக் கருத்து வேறுபாடே முதற் கரணியமாக வுள்ளது. அடுத்தடுத்த சிதைவுகள் பொருள் நசையாலும், புகழ்க் காழ்ப்பாலும், பொறுப்புப் போராட்டத்தாலும் பொருமைப் புரைகளாலும், தலைமைப் பித்தத்தாலும் நிகழ்வுறும். அவ் வுள் உடைவு நிலைகளைப் பற்றிப் படிப்படியாக இங்கு, ஆய்வோம். முதற்கண் கருத்து வேறுபாடு பிழையன்று. அஃது இயற்கையானதாகும். இனி அஃது இன்றியமையாமல் வேண்டும் ஓர் உணர்வு வெளிப்பாடும் ஆகும். கருத்து வேறுபாடே அறிவு மாளிகையின் வளர்ச்சி நிலைப் படிக்கட்டுகள். அவற்றை எந்நிலை யிலும் வரவேற்க எவரும் அணியமாயிருத்தல் வேண்டும். ஆனால், கருத்து வேறுபாடு அறிவைப் பொறுத்ததாக இருத்தல் வேண்டுமே யன்றி மனத்தைப் பொறுத்ததாக இருத்தல் கூடாது. ஒரு மரத்தின் வளர்ச்சிக்கு அதனின் சில கிளைகளைத் தரித்தலும், அதற்குச் சில வகை எருக்களை யிடுதலும் பற்றிய வேறுபாடுகளே அறிவு நிலை வேறுபாடுகளானால், அம்மரத்தின் பூக்களையும், காய் கனிகளையும் மாற்றுதற்கான நிலைகளில் போராடுவது மனநிலை வேறுபாடாம். இவ் வேறுபாட்டால் மரச்சிதைவு நேருமேயன்றி மரச்செழிப்பு நேரா தென்க.

ஒரு கொள்கை ஓர் இயக்கமாக அமைந்தபின், அதன் புறநிலை வளர்ச்சி பற்றிய திருத்தங்களே அல்லது மாற்றங்களே, எண்ணப் பெறுதல் வேண்டும். அக்கொள்கையிலேயே மாற்றங் கற்பிப்பது ஒன்றை நிலை நிறுத்துவதாகாது; சிதைப்பதாகவே அமையும். ஒரு கொள்கையைக் கொஞ்ச காலத்திற்குப் பின்பற்றியிருந்து, அதே கொள்கையைப் பின்னர் தவறு என்று கூறி, அதனின்று வேறுபட்டு, வேறு கொள்கை ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதனை ஓர் இயக்கமாகச் செய்பவர், தாம் இரண்டாவதாகத் தேர்ந்தெடுத்த அக்கொள்கையையும், இடித்துச் சிதைக்க நெடுங்காலமாகாது. அவர் அதனையும் தவறு என்றுகூறி, மூன்றாவதாக ஒரு கொள்கையை நாடமாட்டார் என்பதில் என்ன உறுதி யிருக்கின்றது? எனவே, அவரைப்பொறுத்த அளவில் அவர் அறிவே வளர வேண்டியதாக இருக்கின்றது என்று நாம் கருதிக்கொள்ள வேண்டுமே யன்றி, அவர் கொள்கை மாற்றத்தை அவரின் அறிவு விளக்கமாகக் கொண்டு விடக்கூடாது. அதுவுமன்றி அவர் திட்டவட்டமான ஒரு கருத்தைத் தேர்ந்துகொள்ளவும் திறனற்றவர் என்றும் நாம் கருதிக் கொள்ளலாம்.

மெய்யறிவுக் கோட்பாட்டின்படி எல்லாவகைக் கருத்துகளும் ஒரு கொள்கையின் அடிப்படையிலேயே எழுகின்றன; இயங்குகின்றன. எனவே, ஒவ்வொரு கருத்துக்கும் ஒவ்வொரு வகையான நயன்மை (நியாயம்) உண்டு. திருடனும், கொலையாளனும் கூட தன்தன் செயல்களுக்கு நயன்மை கற்பிக்க முடியும். ஆனாலும் அவை உலகியல் இயக்கப் பொருத்தம் உடையவை என்று கூறமுடியாது; தன் உடன் பிறந்தாளை ஒருவன் மணப்பதற்கும் பாலியல் பொருத்தம் இருப்பதையும், உலகியல் இயக்கப் பொருத்தம் இல்லாமையையும் எண்ணி, இக்கருத்தைத் தெளிந்துகொள்க. எனவே கருத்து வேறுபாடே அறிவு ஆகாது. அறிவுப் புணர்ச்சி இன்றியே கருத்துப் பிறப்புத் தோன்றும். ஆகவே, பிறக்கின்ற கருத்தெல்லாம் அறிவாகாது. இனி, அறிவெழுச்சியிலும் தெளிவும் உண்டு; தெளிவின்மையும் உண்டு. உலகில் ஊற்றெடுக்கும் ஆற்று நீரினும் சுனை நீரினும் கிணற்று நீரினும், உவர்ப்புச் சுவையும், இனிப்புச் சுவையும் அவற்றின் இடைப்பட்ட சுவைகளும் உண்டு. நீர் எனும் பொதுவுண்மையால், குடிநீர் எனும் சிறப்பை அது பெற்றுவிடமுடியாது. சுடர் நிலைகள் பலவுண்டு என்னும் உண்மையால் கைவிளக்கு கதிரவனின் ஒண் சுடராகி விட முடியாது. அவைபோல், ஒருவர் உளத்துத் தோன்றும் தன்மையாலேயே அது கருத்தாகி விடாது. இனி, அதில் அறிவூற்றம் இருப்பதாகவும் கொண்டுவிட முடியாது. உலகின் அனைத்து வெளிப்

பாட்டு நிலைகளிலும் பொருண்மையும் உண்டு; போன்மையும் உண்டு. அவற்றைத் தெளிந்து தேறுவதில்தான் வாழ்க்கைச்சிறப்பே உள்ளது.

எனவே, ஒருவர்க்கு ஒரு கொள்கையில், அது தழுவி இயங்கும் ஓர் இயக்கத்தில்—கருத்து வேறுபாடு தோன்றின மட்டிலேயே, அவர் அறிவுத் தெளிவு பெற்றவராகவோ, அவ்வியக்கம் அறிவு முடக்கம் கொண்டதாகவோ ஆகிவிடமுடியாது. கருத்து வேறுபடுவனெல்லாம் அறிவுள்ளவனுகக் கருதப்படும் போலி நிலைகள் உலகத்தே இருப்ப தால்தான், அறிவுப் பிறழ்ச்சியெல்லாம் அறிவு எழுச்சியாகக் கருத வேண்டிய மயக்க நிலைகளும் உள்ளன. உலகத்தில் உயிர்களாகக் கிளர்ந்தெழுந்தவை யாவற்றிற்கும் அறிவு உண்டு. ஆனுல் தன் னறிவு தன்னியக்கத்துக்கே பயன்படும் கீழ் நிலைக்கும், தன்னறிவு பிறவியக்கத்துக்கும் பயன்படும் மேல் நிலைக்கும் இடையே பல்வகை யான வேறுபாட்டு நிலைகள்; ஒவ்வோர் உயிரினத்தின் படிநிலைகளி லும் உண்டு. ஓர் எறும்புக் கூட்டத்தினை இயக்கவும், வளர்ச்சியுறச் செய்யவும், அக்கூட்டத்துள் பிறவியக்கம் கொண்ட பொதுவுணர் வெறும்புகள் இருப்பனபோல்,மாந்தவினத்துள்ளும்தன்னியக்கஅறிவுள் ளவர்களை இயக்க, பொதுவியக்க வுணர்வுள்ளவர்கள் பலர் உளர். ஆனுல் அவர்களை இனங்கண்டு கொண்டு, அவர்களுடன் தன்னியக்க வுணர்வுள்ளவர்கள் தம்மை இணைத்துக் கொள்வதில்தான், உயிரியக் கத்தின் வெற்றியே அமைந்து உள்ளது. இவ்வியற்கைக் கோட்பாடு- களை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டியே, நமக்கு அறிவு விளக்கம் தரப்பெற்றுள்ளது. ஆகவே, ஒருவர்க்குக் கிளர்ந் தெழும் கருத்து வேறுபாடே பிறிதோர் இயக்கத்தைத் தோற்றுவித்தற் குரிய முழுநிலை வித்தும் உரமும் கொண்டதாக ஆகிவிடாது. ஒரு மரத்தினின்று காற்றுலோ ஒரு கத்தியாலோ பிரிந்துபோகும், ஒரு கிளையோ, கொம்போ, குச்சியோ, அம்மரம் போன்ற வேறு மரங்கள் ஆகிவிடா.அம்மரத்தினின்று முழுமைபெற்று வெளியேறும் வித்துகளே வேறுவேறு கால நிலையினும் இட நிலையினும் அவ்வகையான மரங் களைப் படிப்படியாகத்தோற்றுவிக்க முடியும்என்று தெளிவாக அறிந்து கொள்க. உணர்வுப் பிதுக்கத்தாலும், அறிவுத் திரிபாலும், மன வெழுச்சி கொண்டு ஓர் இயக்கத்தினின்று ஒடிந்து வெளியேறும் ஒரு கிளை, தன்னை ஒருமணற் புதையுள் ஊன்றிக்கொண்டு, தன்னையும் ஒரு மரம் என்றும்கூறிக்கொள்வதும்,நிழலுக்கு அங்காந்து வருவோர்சிலர் அதனையும் தழைத்துப் பொலிந்த ஒரு மரமென்று தவருகக்கருதி, அத- னடியில் தங்குவதும், அதன் நிழலையும் பாராட்டிப்பராவிப் பயனெதிர் பார்ப்பதும், அதற்கும் எருவும் நீரும் இட்டுப் புரக்க முனைவதும், அது, பின், படிப்படியாய்ச் சிலநாளில் இலை வாடி, உடல் காய்ந்து, வேரற்


றது என்று தன்னை வெளிப்படுத்தி வீழ்கின்றதும், இவ்வுலகியல் நாடக இயக்கக் காட்சிகளில் நல்ல நகைச்சுவைப் பகுதிகளாகும்! இந்நகைச் சுவைக் காட்சி யுறுப்பினர்கள் நம் தமிழினத்துள் ஏராள மானவர் அவ்வக் காலத்தே இருக்கத்தான் செய்குவர். ஆனால் அவர்களின் இருத்தல் நிலைகள் உண்மைக்கு உரத்துவலிவாகப் பயன்படு வதைப் பிரித்தறியும் அறிவூட்டம் இல்லாதவர்கள், இயக்கவொழுக்க முடையவர்களைத் தங்களின் ஊன்று கோல்களாகப் பற்றிக்கொள்ளு தல்வேண்டும். அதனையே, ''இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே, ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்''—என்று குறள்மறை வலி யுறுத்தும்.

இவ்வகையில், நம் தமிழ்நாட்டின்கண் ஆங்காங்குத் தோன்றும் இயக்கப் பெருக்கத்திற்கும், மயக்கக் கொள்கைத் தருக்கத்திற்கும் அளவே இல்லை. இவையெல்லாம், தமிழினம் ஒருவகை வளர்நிலை மாற்றத்தின் அடித்தட்டிலேயே உள்ளது என்பதையே காட்டும். நம்மிடையில் ஒரே கொள்கைக்குப் பல இயக்கங்கள் உண்டு. ஒவ்வொன்றும் கொள்கை மாறுபாட்டால் தோன்றியது என்று கருதி விடக்கூடாது. ஆனால் கொள்கை மாறுபாடுதான் இவ்வியக்கங்களுக்கே கரணியம் என்று கவர்ச்சியாகக் கூறிக்கொள்வதில், இயக்கச் சிதைப்பாளர்களுக்கு இடைக்காலத்தில் ஒரு பெருமை கிடைக்கலாம். இப்பெருமையும் வெறுமையாகப் போய், தங்கள் இயக்கக் கதவுகள் மூடப்படும் காலத்தை அவர்களே அறியார்கள். ஆனால் ஒன்றை, மிகத்தெளிவான ஒன்றை, வளர்ந்துவரும் தமிழினத்தின் நன்மை நாடும் உள்ளுணர்வுள்ளவர்கள், நன்றாக அறிந்துவைத்துக் கொள்ளுதல் வேண்டும். நாம் ஒவ்வொருவரும் நமக்குள்ள ஒவ்வொரு கருத்து மாறுபாட்டிற்காக ஒவ்வோர் இயக்கத்தைத் தோற்றுவிப்போமாயின், இந்நூற்றாண்டின் இறுதியில் நம் இனத்துள்ள ஒவ்வொருவருமே ஒவ்வோர் இயக்கமாக ஆகிவிடும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோம் என்பதே அது. இந்நிலை ஓரின முன்னேற்றத்தின் முடிநிலையன்று; ஓரின அழிவின் முடிநிலையாகும். ஆழ்ந்த மாந்தவியல் அறிவுள்ள இன முன்னோடிகள் இந்தக் கருத்தின் ஆழத்தை நன்கு ஆய்ந்து விளங்கிக்கொள்ள வேண்டுகின்றோம்.

இக்கால், நம் தமிழர்களுக்கென்று இயங்கப் புறப்பட்டிருக்கும் இயக்கங்கள் சில தாறுமாறான கொள்கையமைப்புகள் கொண்டவை; அவற்றைத் தனித்தனியே இங்கு ஆய்ந்து சுட்டி, அவை மேலும் மேலும், அறிவுக் காழ்ப்பும் கொள்கை முரணும் கொண்டு, தங்கள் பிறவி நிலைகளை இழிவுபடுத்திக்கொள்ள முற்படுகின்ற நிலையினை, நாம்

விரும்பவில்லை. ஆனாலும், அவைதாமே தம் இயலாமைகளையும் தகுதியின்மைகளையும், உணர்ந்து தெளிந்து, தமிழின முன்னேற்றத்துக்கே ஊழ்த்த ஆணிவேர் எதுவென அறிந்து தேர்ந்து, அதற்குப் பக்க வேர்களாகத் தங்களை ஆக்கிக்கொண்டு, இயங்க முற்படுதல் வேண்டும் என்பதே நம் தலையாய விருப்பமும் வேண்டுகோளுமாகும். இவ்வெண்ணத்தில் எவ்வகையான முனைப்போ, முரணோ, புகழ் அங்காப்போ, பொருள் நசையோ, பொறுப்புப் போட்டியோ, தலைமைப் பித்தமோ ஓர் எள் முக்கத்துணையும் இல்லையென்பதை எதிர்காலம் நிலைநிறுத்தும். ஓர் இயக்க வண்டி எத்திசையில், எப்பாதையில், எந்த வேகத்தில் இயங்க வேண்டுமென்பதைத் தேர்ந்துகொள்ள வேண்டுமென்பதற்கே இக்கருத்துகள் இங்கு ஆயப்பெறுகின்றனவே யன்றி, அவ்வண்டியில் எவரெவர் முன் அமர்தல் வேண்டும் என்பதற்கோ, எவரெவர்கள் பக்கவாட்டில் அமர்தல் வேண்டுமென்பதற்கோ, எவரெவர் பின் அமர்தல் வேண்டும் என்பதற்கோ அன்று என்பதை முதற்கண் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டுகின்றோம். மற்று, ஓர் இயக்கப் புலத்தில், குறுக்குச்சால் ஓட்டுபவர்களின் மன வுணர்ச்சிகளையும், வினையெழுச்சிகளையும் நாம் நன்கு அறிவோம். அவ்வுதிர்நிலைகள் என்றும் உதிரி நிலைகளே ஆகும்: எனவே இனி, இங்கு எடுத்துக் கூறப்படும் கருத்து நிலைகளுக்கு அனைவரும் செவிசாய்த்து, அவற்றின் அறிவுப் புலத்தில் கண்ணூன்றக் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி, ஓர் இயக்கக் கோட்பாட்டில் அடுத்தடுத்து வந்துறும் புறநிலை வேறுபாடுகளைப் படிப்படியாக ஆராய்ந்து தெளிவோம். அதனை அடுத்துவரும் இதழ்களில் பரக்கப் பார்ப்போம். — (தொடரும்)



## உறுப்பினர்களைச் சேருங்கள்!

தென்மொழி அன்பர்கள் கோவையில் தொடங்கியிருக்கும் சேரர் கொற்றத்தின் நடவடிக்கைகளை ஆங்காங்குப் பின்பற்றிச் செயற்படுத்தலாம். சேரர் கொற்ற அறிக்கை இவ்விதழில் வேறு ஒரு பக்கத்தில் அச்சாகியுள்ளது.

அத்துடன் தென்மொழிக்கு ஆங்காங்குள்ள ஆர்வலர்கள் தம்மால் இயன்ற அளவில் உறுப்பினர்களைச் சேர்த்து அனுப்புவதில் மும்முரமாக ஈடுபடக் கேட்டுக் கொள்கின்றேன்.-ஆசிரியர்.

# இளைஞர்களே! ஓ! இளைஞர்களே!
# பறந்து திரியுங்கள்!-உங்கள்,
# இளமைச் சிறகுகள் இற்றுப்போகும்
# வரை, பறந்து திரியுங்கள்!

---

தன்னல வுணர்வுக் கூட்டுக்குள்
ஒழுக்கச் சிதைவுகள் முட்டையிடத் தொடங்கி விட்டன.
'நானே துய்ப்பேன், நானே துய்ப்பேன்'—என்னும்
குஞ்சுகளின் கிசுகிசுப்பொலி கேட்கின்றது!

உலகத்தை உருவாக்கப்போகும் வீரர்களே!
மண்ணை—உங்கள் குருதியால் குழம்பாக்கி,
எலும்புகளால் உழப்போகும், இளைஞர்களே!
எங்கே புறப்பட்டு விட்டீர்கள்?

பெண்களின் மார்பு மேடுகளைச் சமப்படுத்தி,
அவர்களின் தோள் மூங்கில்களைச் சாய்த்து,
அவர்களின் இதழ்ப் புழுதிகளில் விதைகளை ஊன்றி,
அவர்களின் வயிற்று வயல்களில் மாந்தப் பயிர்களைத்
தோற்றுவிக்கப் புறப்பட்டு விட்டீர்கள்போல் தெரிகின்றது!
நல்லது!

எற்கனவே இங்கு உள்ள உடல் கூடுகளைப்
பட்டினிக் கழுகுகளுக்கும், பசி நரிகளுக்கும்
இரையாக விட்டு விட்டீர்களே!
விளைந்த வயல்களைக் காயப் போட்டுவிட்டு,
விளையாத களம்பு நிலங்களை,
உங்கள் சோம்பலாலும் கோழைத்தனத்தாலும்,
கட்டி உழப் போகின்றீர்களே!—
உங்களுக்கு வெட்கமாக இல்லையா?
மான மில்லையா?
ஆண்மையில்லையா? அறிவு இல்லையா?

உங்கள் வயல்களில்
எருக்குகளை நடுகின்றீர்கள்;
முல்லை மலர்களைப் பறிக்கக் காத்திருக்கின்றீர்கள்!
நெருஞ்சிக்கு நீர் பாய்ச்சுகின்றீர்கள்;
முளரிகளின் மணத்தை எதிர்பார்க்கின்றீர்கள்!
உன்மத்தஞ் செடியின் விதைகளை நட்டீர்களே;
தாமரைப் பூவென்று அழைக்கவா நினைத்தீர்கள்—?
இளைஞர் என்னும் பெயரில் உலாவரும்
மாந்தக் காளான்களே!

உங்கள் கண்களில் காமநோய் !
காதுகளில் சுடுகாட்டு ஆரவார ஒலி!
உங்கள் முகங்கள் முள் புதர்கள் !
தலைகள் மயிர்க் காடுகள் !
சிரிப்பு நீங்கள் வருவிப்பது !
பேச்சு சாய்க்கடையின் சல சலப்பு !
கெக்கலிப்பு நில நடுக்கங்களின் மலைச் சிதறல்கள் !
மகிழ்ச்சியை நீங்கள் செய்கின்றீர்கள் !

உங்கள் கோணல் மாணலான ஆட்ட நடைக்கு
'வாழ்க்கை" என்று பொய்ப் பெயர் சூட்டுகின்றீர்கள் !
சூம்பிப் போன உங்கள் நெஞ்சாங்குலை,
இன்னும் கொஞ்ச காலத்திற்கு இயங்கலாம் !
உங்கள் நெஞ்சு எலும்புகளில்
தாறுமாறான எண்ண அரிப்புகள் ஏற்பட்டுள்ளன !

உங்கள் அன்பு —
இதழ்களை முத்தமிடத் துடிப்பதாகத் தெரியவில்லை ;
தசைகளைக் கடித்துக் குதறப்போகும் வெறியேறி நிற்கின்றது !
வீரப் போட்டங்கள் உங்களுக்குத் தெரியாது ;
'காதல்' போராட்டங்களை நிகழ்த்தக் காத்திருக்கின்றீர்கள் !
உங்கள் சதைத் திரளைகளை,
'அது' கொத்தித் தின்னப் போகிறது !
நரம்புத் தினவுகளை 'அது' வற்றடிக்கப் போகிறது !

இளைஞர்களே ! ஓ, இளைஞர்களே !
திரைப் படங்கள் மாலை அருவிக் குளிப்பாக
உங்களுக்குப் படுகின்றன...?
பெண்கள் 'பட்டாம் பூச்சி'களாக உங்களுக்குப்
படுகின்றனர் !
'காதல் பறவை"களாக, உங்களைத்—தம்
காட்சி மந்திரக் கோல்களால்,
ஆக்கி வைத்திருக்கும் திரைப்பட மந்திரக்காரர்கள்,
உங்களை, வெறும் மண்டையோடுகளாய்
ஆக்கப் போவது உறுதி !
அதுவே உங்களுக்கு இறுதி !
அதுவரையில் உங்களை யாரும்
தடுத்து நிறுத்திவிட முடியாது !
பறந்து திரியுங்கள் ! உங்கள்,
இளமைச் சிறகுகள் இற்றுப் போகும்வரை
பறந்து திரியுங்கள்!

o

## பாவாணர் அறிக்கை!

# உண்மைத் தமிழர்க்கு ஓர் எச்சரிப்பு.

ஆங்கிலர் ஆட்சிக் குட்பட்டிருந்த மற்றெல்லா நாடுகளும், சின்னஞ்சிறு தீவுகளுங்கூட, முழுவிடுதலை பெற்றுவிட்டன. தமிழ் நாடு ஒன்று மட்டும் இன்னும் விடுதலை பெறவில்லை. விடுதலை பெற்றுவிட்டதாகக் கருதிக் கொண்டிருக்கும் ஒருசார் தமிழர், உயிருக்குக் கேடாகப் பரவி வரும் ஒரு கொடிய உள்நோயை உணர முடியா நோயாளியர் போலவர்.

தி. மு. க. அரசு சட்டசவையில் முழு வலிமையோடு நிறைவேற்றிய திருக்கோவில் தமிழ் வழிபாட்டுத் தீர்மானம், ஓரிரு தஞ்சைப் பூசாரியர் எதிர்ப்பினால் முற்றும் வலியற்றதாகிவிட்டது. தடியடியுண்டு, கடுஞ்சிறைப்பட்டும், கைகாலிழந்தும், குண்டுக் குழாய்க்கு இரையாகியும், கன்னெய் குளித்தெரியூட்டியும், கட்டாய இந்தியை யெதிர்த்த களங்கமற்ற தமிழ் மறவர்க்கும் அவர் வழியினர்க்கும், அரசு அளிக்கவிருந்த ஈகச் சம்பளமும் அரத்தக் காணிக்கையும் தமிழ்ப்பகைவர் தடுப்பால் நிறுத்தப்பட்டு விட்டன.

அடிப்படைத் தூய தமிழ்ச் சொற்களெல்லாம் ஆரியச்சொல் லாகக் காட்டப்படுகின்றன. தென்சொற்கள் வழக்கு வீழ்த்தப்பட்டும் வடசொற்கள் வலிந்து புகுத்தப்பட்டும் வருகின்றன.

இந்திய வரலாறும் தமிழக வாலாறும் தலைகீழாக எழுதப்பட்டுள்ளன. எல்லாத் துறையிலும் ஆரியத்தை அல்லது பிராமணியத்தை ஒப்புக்கொண்டாலொழிய, தமிழ்நாட்டிலும் தமிழனுக்கு வாழ்வில்லை.

ஆரியமும் இந்தியும் மேன்மேலும் அடர்த்து வருவதை நோக்கின், எதிர்காலத்தில் தமிழ் என்றொரு மொழியும், தமிழன் என்றோரினமும், தமிழம் என்றொரு நாகரிகப் பண்பாடும் இருக்கவே முடியாது. இந்நிலையில், இற்றைத் தமிழர் தம் குமரிநாட்டு முன்னோர் போல உயர் திணையாய் வாழவேண்டின், ஒன்றுபட்டு ஒரே கழகமாகச் சேர்ந்து ஆரியத்தை எதிர்த்துப் போராடி விரைந்து விடுதலை பெறல் வேண்டும்.

தமிழ் ஆரியத்தாலும் தமிழன் ஆரியனாலும் வீழ்த்தப்பட்டிருப்பதால், ஆரியத்தை எதிர்க்காது தமிழன் உரிமைபெற முடியாது. முடியுமென்பார் குதிரைக் கொம்பேறி வானத்தாமரை பறிப்பவரே.

> "பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
> கொல்குறும்பும் இல்லது நாடு" (குறள்: 735)

ஆதலால்; எல்லா மன்றங்களும் கழகங்களும் உலகத் தமிழ்க் கழகத்துடன் இணைந்தே செயற்படல் வேண்டும். மரபு நெறிப்படி தமிழ் வளர்ச்சியையும் மாண்பான முறையில் தமிழன் முன்னேற்றத்தையும், குறிக்கோளாகக் கொண்டது உலகத் தமிழ்க் கழகம் ஒன்றே.

எல்லா நாடுகளிலும் உட்பகைவர் இருக்கத்தான் செய்கின்றனர். ஆயின், நாடு கெடுமாறு பெருந் தொகையரான உட்பகைவர் (பாழ் செய்யும் உட்பகை) இருப்பது தமிழ்நாடு ஒன்றே.

"வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு".

சிலர் தம்மைப் பகுத்தறிவியக்கத்தாரென்றும் தனித் தமிழியக்கத்தா ரென்றும் சொல்லிக்கொண்டு, தமிழர் ஒற்றுமையைக் குலைப்பர். சிலர் தமிழாரியப் போராட்டமின்றியே தமிழை வளர்க்க விரும்புவர். அது நோய் நீக்காது நலம்பெற விரும்புவதொத்ததே.

இங்ஙனம், தன்னலம்பற்றியும் பெயர்பெறக் கருதியும், பகைவருடன் ஒத்துழைத்துத் தமிழையும் தமிழரையும் கெடுக்கும் பல்வகை வையாபுரிகளைப் பிரித்தறிந்து, வாய்மைத் தமிழர் வழியையே கடைப்பிடிக்க.

குமரிநாட்டுத் தமிழ்த் தோற்றத்தை ஒப்புக்கொள்ளல், தனித் தமிழ்ப்பற்று, ஆரிய ஏமாற்றொழிப்பு ஆகிய மூன்றே வாய்மைத் தமிழர் பண்பு. அவரல்லார் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சி என்னும பெயரால் கூட்டுங் கூட்டங்களையும் காட்டுங் காட்சிகளையும் அறவே புறக்கணிக்க. பிறர்க்கும் அவற்றின் தீங்கை எடுத்துரைக்க.

—ஞா: தேவநேயன்.

## சுவடி 12: ஓலை 4: பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 13 | என்னினும் | என்னினம் |
| — | 14 | என்னினம் | இடர்ப்பட்டு |
| — | 17 | கொல்லும் | கொள்ளும் |
| 6 | 29 | கதரினும் போல் அம் | கதிரினும்போல் |
| 8 | 36 | வாழ்வுப் | வாழ்வு |
| 8 | 37 | ஊடுறுவுகிறது | ஊடுருவுகிறது |
| 9 | 4 | ஆம்பயற் | ஆம்பியிற் |
| 13 | 9 | வடக்கும் | வடக்குக்கும் |
| 22 | 10 | ஒழுந்தோர் | ஒழிந்தோர் |
| 25 | 15 | பழுநிய | பழுனிய |
| 28 | 24 | வடமொயில் | வடமொழியில் |
| 33 | 6 | நிலைபடுத்திக் | நிலைப்படுத்திக் |
| 33 | 7 | தீய்ந்து | தீய்த்து |
| 38 | 30 | கட்டடங்கள் | கட்டிடங்கள் |
| 39 | 19 | கட்டட | கட்டிட |
| 39 | 19 | கட்டடம் | கட்டிடம் |
| 40 | 36 | கொய்யாக் கணியே ! | கொய்யாக் கனியே ! |
| 44 | 28 | 18—9—75 | 18—9—74 |

# பண்ணாராய்ச்சிப் பாவாணர்
# குடந்தை திரு. ப. சுந்தரேசனார்
# மணிவிழா.

இசைத்துறையில் தூய தமிழ் மறுமலர்ச்சியை உண்டாக்கி வருபவரும், ஏழிசை யறிவு நிரம்பப் பெற்றவரும், 'தமிழிசையே தம் உயிர்; தமிழ்ப் பண்ணே தம் உடல்' — என்று தம் வாணாளையே இசைத்தமிழ்க்குப் படையல் செய்தவரும் ஆகிய இசைப் பேரறிஞர் குடந்தை திரு. ப. சுந்தரேசனார் அவர்களுக்கு மணி விழா ஒன்றினை நடத்துவதற்கும்,

அவர்களுடைய பண்ணிசைப் பாடல்களை இயன்றவரை நாடாப் பதிவு செய்வதற்கும்,

அவர்களால் எழுதப் பெற்றிருக்கும் இசைபற்றிய அரிய ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவதற்கும்,

வடமொழி கலவாத பழைய தூய தமிழ்ப் பண்களையும், ஏழிசை யமைப்புகளையும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு, அவர்களைக் கொண்டே பயிற்றுவித்துத் தொடர்ந்து அவற்றை மயுப்படுத்துவ தற்கும், எண்ணங்கொண்டு,

திருச்சி மாவட்டம், அரியலூர், மணிவாசக மன்றம் விழாக் குழு ஒன்றினை அமைத்துள்ளது. அவ்விழா இனிதே நடைபெறுதற்கும், அதன் தொடர்பாக மலர் ஒன்றினை வெளியிடுதற்கும், ஏழிசைத் தமிழ்மகனார் சுந்தரேசனார் அவர்களுக்கு ஒரு பெருங்கொடை வழங்குவதற்கும், மேற்கண்ட மூவினைகளும் நிறைந்து நடைபெறு தற்கும், அன்பர்களும், செல்வர்களும், மாணவர்களும் இயன்ற பொருள் உதவியருளுமாறு வேண்டிக்கொள்ளப் பெறுகின்றார்கள்.

நன்கொடை விடுக்கவேண்டிய முகவரி:

பொருளாளர்,
பண்ணாராய்ச்சிப் பெருந்திறலோர், ப. சுந்தரேசனார்
மணிவிழாக்குழு,
மணிவாசகர் மன்றம், வேளாளர் தெரு,
அரியலூர், 621704-திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.

# தென்மொழி அன்பர்கள் கவனிக்க!

## ‘தென்மொழி அன்பர் குழு’

## வேண்டுகோள் அழைப்பு

அருந்தமிழ் அன்பர்காள்!

வணக்கம் பல. ‘தென்மொழி’யின் பேரறம் உருற்றும் பெருந் தாளாண்மையும், ஆரிடர் உழந்துங் கைதுரவா வினைமாட்சியும், இவைக்கெனத் தன்கைத்தொன்று உண்டாகும் வழிவகையிலா துழி தரு நிலைமையும், அதன் குடிசெயும் நல்லாண்மையானன்றி நம்மனோர் உலகுயிர் வாழ்க்கை அமையாமையும் எண்ணி யெழுந்ததே இவ் வேண்டுகோள் அறிவிப்பு.

நம் பாவலரேறு பெருஞ்சித்திரனாரவர்களின் சிங்கை, மலையச் செலவின் பொருளுதியங்கள், ‘தென்மொழி’யின் இடமாற்றத்திற்கும் சென்னைக்கண் காலூன்றுதற்கும் பெரிதும் துணைநின்று வந்துள்ளன; எனினும், இனி அதன் தொடர்ந்த நிலைப்பாடும், இடையரு வெளியீடும், பெரும்பாலும் பாவலரையா அவர்களின் பல்வேறிடக் கூட்ட நிகழ்ச்சிகளினின்று வருங் கூட்ட வருவாயைப் பொறுத்தே அமையும் நிலைதான் உள்ளது.

எனவே, இதற்கொரு தீர்வு காணும் வகையில், ஐயா அவர்களின் கூட்ட நிகழ்ச்சிகளை ஒரு கால வரன்முறைக்கு உட்படுமாறு (திங்கட் கொருமுறை யென்றோ, முத்திங்கட் கிருமுறை யென்றோ) பல்வேறிடங்களிலும் தென்மொழி யன்பர்கள் வரையறையாகத் தொடர்ந்து நிகழுமாறு அமைத்துத் தருதலே சாலச்சிறக்கும். இதன் வழி இவ்வகையில் வரும் வருவாய்த் தொகையும் ஒருநிலைப்பட்டுத் திட்டமாய்த் தெரிந்துவிட, ஐயா அவர்கட்கு வினை செயல்வகையும் ஒருவாறு எளிமையாகும்.

இந்த நோக்குடன்தான் இவ்வறிவிப்பின்வழிக் கோவை நீலமலை மாவட்டத்தும், குறிப்பாகக் கோவை நகரத்தும் அதன் அணிமைப்புறத்தும் உள்ள அன்பர்கள் ஒருங்குகூடித் ‘தென்மொழி அன்பர் குழு’ வென்ற கூட்டமாக இணைந்து முயன்று திருவினையாக்கிப், பிறாண்டும் இனைய ஆள்வினை யுடைமை தோன்ற வழிகாட்டுமாறு, அத்தகைய மெய்யன்பர்களை அழைக்கின்றோம். கூட்டக் கட்டணங்கட்கும் பிறவற்றிற்குமான ஒண்பொருள் காழ்ப்ப இயற்றும் வகைதெரிதற்கும், இவ் வறத்தை மறத்தலாங் கேடின்றி, வீழ்நாள் படாஅமை நன்றாற்றும்படி அமைவு காண்டற்கும், இதன் வழித் ‘தென்மொழி’யின் நீள்வினை நாளும் நலியாது நீளுதற்கும் வேண்டிக், கோவை, நீலமலை மாவட்ட அன்பர்களும், கோவை நகர நகர்ப்புற அன்பர்களும் உடனடியாகக் கீழ்க் குறிக்கப்பட்டாருழை மடல்வழியும் பிறவழியுந் தாழாது தொடர்புகொள்ளுமாறு வேண்டுகின்றோம். அடுத்தூன்றும் நல்லாளாய் நின்று எங்கள் கடப்பாட்டை எளிதாக்கக் கோருகின்றோம்.

இன்னணம், பணிதருங் கடன்செறி,

சோ. தமிழ்மகன், கோவை. நிலவழகன்,

மறை. நித்தலின்பன். அமைப்பாளன்மார்.

தொடர்பு கொள்ள:- மறை. நித்தலின்பன்—அமைப்பாளர். தெ.அ.கு.
39, ‘மறைமலையடிகள் மனை”, 11-ஆம் தெரு.
தாதாபாது. கோவை–641 012.

# செய்திகள்

## 1. புதுக்கோட்டை - மன்னர் கல்லூரி, முத்தமிழ் விழா:

தி.பி. 2006, சுறவம் 19, 20 (1, 2—2—75) ஆகிய நாட்களில் புதுக்கோட்டை, மன்னர் கல்லூரி முத்தமிழ் விழா நடந்தது. முதல் நாள் காலை தொடக்கவிழாவிற்கு திரு. யூ. சமால் முகமது, க. மு; ஆ. ப. (கல்லூரி முதல்வர்) தலைமை தாங்கினர். வரவேற்புரையை திரு. க, பாணடியன (வணிகம்-3 ஆம் ஆண்டு) நிகழ்த்தினர். தொடக்கவிழாச் சிறப்புரை, மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர், உயர்திரு. சுப்பிரமணியம், இ. கா. ஊ. அவர்கள் நிகழ்த்தினர். பின்னர் தொடங்கிய 'இலக்கியத்தில் கொள்கை முழக்கங்கள்' என்னும் கருத்தரங்கத்திற்கு, பாவலரேறு. பெருஞ்சித்திரனர் தலைமை தாங்கினர். உயர்திருவாளர்கள்: சாமி, தியாகராசன், கா. மு.; கி. க; ஆ.ப.; பண்டுவர். தொமினிக்கு சாமிநாதன். க.ம. க அறு.; க. பாண்டியன், (3-வணிக.); உமையாள் முத்து, க. இ.; ச. இ. ஆகியோர் கருத்துரையாற்றினர். இறுதியில் தலைவரின் முடிவுரை அனைவரையும் மிகக் கவர்ந்தது. பாவலரின் உரையைக் கல்லூரித் தலைவரும், மாவட்டக் காவல்துறைத் தலைவரும் மிகுதியும் பாராட்டினர்.

## 2. புதுக்கோட்டை, இலக்கியப்பேரவை:

தி. பி. 2006; சுறவம் 21. (3—2—75) அன்று மாலை 6 மணியளவில், புதுக்கோட்டை இலக்கியப் பேரவை விழா குலபதி பாலையா பள்ளியில் நடந்தது. திரு, சாமி. தியாகராசன் க.மு:, கீ. க. தே, தலைமை தாங்கினர். தொடக்கத்தில் திரு. இரா. பாவணன் அறி, இ. சிறந்த ஓர் உரையாற்றினர். அதன் பின்னர் தென்மொழி ஆசிரியர் திரு. பெருஞ்சித்திரனர் அவர்கள் சிறப்புரையாற்றினர் கூட்டம் இரவு நீண்ட நேரம் நடந்தும் அன்பர்கள் ஆர்வமாக இருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது.

## 3. புதுவை-கதிர்காமம் பொங்கல் விழா:

புதுவை-கதிர்காமம் - இளந்தமிழர் தனித்தமிழ் இயக்கத்தின் சார்பாக, சுறவம் 27, (9—2—75)-இல் நடந்த பொங்கல் விழாவிற்குப் புலவர் நா. தாயகன் தலைமை தாங்கினர், திரு மு. தமிழ் மணி வரவேற்புரையாற்றினர். அதன்பின்பு, திரு. வை. கணேசனர் அவர்களும், திரு. பெருஞ்சித்திரனர் அவர்களும் சிறப்புரை

யாற்றினர். இவ்வட்டாரத்தில் இக்கூட்டம் ஒரு பரபரப்பையும் நல்ல தமிழுணர்வையும், தமிழின எழுச்சியையும் உண்டாக்கியது.

## 4. சேலம்-பனைமரத்துப்பட்டி-திருமணம்!

கடந்த (14—2—75) வெள்ளி காலை 6 மணிக்கு நெடுநாளைய திராவிடர் கழகத் தலைவர் திரு. மாரிமுத்து அவர்களின் மகன் திரு. மா. தியாகராசன் அவர்களுக்கும் செல்வி. நாகராணிக்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் தலைமையில், சேலம், பனைமரத்துப்பட்டி, மணமகன் இல்லத்தில் திருமணம் நடந்தது. ஆரியப் பழக்கவழக்கத் தீமையையும், தமிழர் திருமண நோக்கத்தையும், சிறப்பையும் விளக்கிப் பாவலர் அவர்கள் சொற்பொழிவாற்றி மணமக்களை வாழ்த்தினுர்.

## 5. கலப்புத் தமிழ் இதழ்கள் பொசுக்கப்பெற்றன:

கடந்த சுறவம் 27, (9—2—75) ஆம் நாள், மாலை 6 மணியில் நீலமலை, பெரும்பகல்லாக் குடியிருப்பில் உள்ள தமிழன்பர்கள் 26 பேர் சேர்ந்து, பொது மக்கள் முன்னிலையில், தூய தமிழ் எழுதாமல் கலப்புத் தமிழ் எழுதித் தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் இழிவு சேர்க்கும் தினத்தந்தி, தினமணி, நவ இந்தியா, தினமலர், மாலை முரசு, மக்கள் குரல், சுதேசமித்திரன் போன்ற நாளிதழ்களையும், துக்ளக், கல்கி, ஆனந்தவிகடன், இராணி, குமுதம், கல்கண்டு, அமுதசுரபி, மஞ்சரி, கலைமகள், தினமணிக் கதிர், வாலிபம், தேன் கிண்ணம்—மற்றும் பல கீழ்த்தரமான கிழமை, பிறை, திங்களிதழ்களையும்,—அவ்விதழ்கள் நம் மொழிக்கும் இனத்திற்கும், பண்பாட்டிற்கும் செய்யும் கேடுகளை எடுத்து விளக்கியபின், ஒருங்கே குவித்து தீ மூட்டிக் கொளுத்திப் பொசுக்கினுர்கள். 'தென்மொழி'யின் வேண்டுகோளை நிறைவேற்றிய அத்தமிழன்பர்களைப் பாராட்டுகின்ருேம்.

## 6. பாவாணர் பிறந்தநாள் விழா:

தஞ்சை, உறந்தைராயன் குடிக்காடு, ஊர் நலன் வளர்ச்சிக் கழகச் சார்பில், கடந்த சுறவம் 25, (7—2—75) ஆம் நாள் இரவு 9 மணியளவு: மொழி நூல் மூதறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்களின் பிறந்தநாள் விழா, கழகத் தலைவர் தலைமையில் கொண்டாடப்பட்டது. அக்கால் பேச்சுப்போட்டி ஒன்றும் நடைபெற்றது. போட்டியில் கலந்து கொண்டவர்களுக்குப் பாவாணர் நூல்கள் பரிசளிக்கப் பெற்றன. இறுதியில் திருவாளர்கள் பா. இறையெழிலன், சாமி- தவிடன் அறி. இ., புலவர் அ. சித்திரவேலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். அன்று மாலை கழகச் செயலாளர் கோ. இளவழகன் ஏழைகளுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றினுர். கழகத் துணைத் தலைவர் விழாவில் கலந்துகொண்டவர்களுக்குச் சிற்றுண்டி வழங்கினுர்.

# அறிவியல் நெறிமுறை

## வரையறைகள்-பூதநூல்.

இல. க. இரத்தினவேல்.

(பூதவியற்றுறை; பெரியார் கல்லூரி, திருச்சி-20)

### முன்னுரை

தமிழில் அறிவியற் கல்வியைப் புகட்டுவதைப் பற்றிய சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

Physics என்பதற்கு நேரான பழந்தமிழரின் அறிவியல் பூதநூல். பாவாணரின் அஃகியகன்ற மொழிநூல் விளக்கத்தை முன்வைத்தும், பழந்தமிழ் இலக்கியச் சான்றுகளை எடுத்துரைத்தும் 'நிலம்,தீ, நீர்,வளி,விசும்போடைந்து' 'பூதச் செயல்களின் நுட்பங்கள் யாவையும்' விரித்துரைக்கும் பழந்தமிழரின் பூதநூலை மறுத்து, ('பூதம்' என்பது வட சொல்லென மயங்கிய காலத்தில், தொகுத்த பா். சிதம்பரநாதர் அவர்களின் அகரமுதலியில் தாம் கண்டெடுத்த பொருட்செறிவற்ற) 'இயற்பியல்' என்ற சொல்லையே அனைவரும் ஆள வேண்டுமென்று அடாவடித்தனம் செய்வது என்ன தமிழ்ப் பண்பாடோ? பா். இலக்குவனார் தூண்டுதலால் மதுரைப் பல்கலைக் கழகத்துக் கல்லூரிகள் 'பூதவியல்' எனப் பொருத்தமாகப் பெயரிட்டும் அதனை மறுப்பது என்ன இயல்போ? "இதற்குப் 'பௌதிகம்' என்றே இருந்துவிட்டுப் போகட்டுமே! தமிழறிவு மிக்க இளந்தலை முறையினர் சரியான சொல்லை ஆள வாய்ப்பாகவாவது இருக்குமே'' என்கின்றனர் தமிழ் வெறுப்பாளர் சிலர். பூதவியல் என்றால் மாணவர்கள் மிரண்டு படிக்க முன்வர மாட்டார்களாம்!

இந்த ஆண்டு மதுரைப் பல்கலைக் கழகத்தார் நடத்திய அறிவியல் தமிழ்ப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட பூதவியல் ஆசிரியர்கள் அனைவரும், 'இயற்பியல் என்பது எந்த அறிவியலையும்- சிறப்பாகப் பயிர் நூலையும் விலங்கு நூலையும்-குறிக்கும் பொதுச்சொல், அது Physics-ஐத் தெளிவுபடுத்தாது' என்ற கருத்தைக் கொண்டமை கருதத் தக்கது. நிற்க.

அறிவியலைத் தமிழில் நடத்துவதற்காகக் கல்லூரி ஆசிரியர்-களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெற்று வருகின்றன. முந்தைய ஆண்டுப் பயிற்சி வகுப்பு ஒன்றில் நடந்த சுவை பயக்கக் கூடிய இரு நிகழ்ச்சிகள் தூயதமிழ் எப்படியெல்லாம் புறக்கணிக்கப்பட்டு

வருகிறது என்பதைப் புலப்படுத்தும். 'இயன்ற அளவு தூயதமிழ்' என்பதற்கு மாறாக 'முடிந்த அளவு கலப்புமொழி' என்பதே கோட்பாடாக நிலவுகிறது.

## முதல்நிகழ்ச்சி

ஒருவர்: 'Aneroid barometer-ஐத் தமிழில் எவ்வாறு கூறலாம்?

பெரும்பேராசிரியர்: 'அனிராய்டு பாரமானி' என்றுதான் எழுதியிருக்கிறோமே!

இன்னொருவர்: அதில் மானி ஒன்றுதான் தமிழ்; அதனை முழுக்கத் தமிழில் மாற்றலாம் எனக் கருதுகிறோம்.

மற்றொருவர்: 'அனிராய்டு' என்பதற்கு என்ன சொல்லலாம்?

பெரும்பேரா: 'தமிழ் தமிழ்' என்று நாம் அறிவியலைப் புறக்கணிக்கும் 'அபத்தத்துக்கு' ஓர் எல்லை யில்லையா? அந்தப் பாரமானி'யைக் கண்டுபிடித்தவருக்குச் சிறப்பளிக்கும் Aneroid என்ற அறிஞர் பெயரையும் தமிழாக்க வேண்டும் என்பது வெறித்தன்மையே யன்றி வேறன்று.

உடனே மொழிநூல் அறிந்த அறிவியலாளர் ஒருவர் எழுந்தார்:

மொழிநூ: ஐயன்மீர்! aneroid என்ற சொல் a + neros + eidos எனக் கிரேக்க மொழியின் வழியினது. இதில்

a < அ, அல்-எதிர்மறையைச் சுட்டும் முன்னொட்டு. neros < நீர் - நீரம். பின்னொட்டுக் கூடிய 'உலக முதற் செம் மொழிச் சொல்'.

இத்தகைய பின்னொட்டுத் திரிபுக்குமேற்கோள்,

நமது தொண்டித் துறையை அவர்கள் TUNDIS என்றும் முசிறியை MUZIRIS என்றும் வழங்குவதே! நீர்-வடிவப் பொருளுக்கு (liguid) 'அம்' என்ற பெருமைப் பொருட் பின்னொட்டை (augmentative suffix) அளித்து நீரம் என்றுவழங்கலாம். eidos என்பது form எனப்படும் வடிவம். எனவே aneroid எனபதை அல்நீர அல்லது அனீர அல்லது நீரமிலா என்று குறிக்கலாம்.

பெரும்பேரா: நீரம் என்பது எவருக்கும் புரியாது. திரவம் என்று தான் இருக்க வேண்டும். எனவே 'திரவமிலாப் பாரமானி என்றே திருத்தி விடுகிறோம்.

மொழிநூ: ஐயன்மீர்! அதனை அனீரம் என்றுதமிழாகக் குறியுங்கள். அன்றி அனிராய்டு என்று எழுத்துப் பெயர்ப்பாக வாவது இருந்துவிட்டுப் போகட்டும். அனிராய்டு என்பதில் தமிழ் வடிவமாவது இருக்கிறது.

பெரும்பேரா. மொழிநூல் படிப்பதோ அன்றித் தமிழ் படிப்பதோ நமது வேலையில்லை என்பதை அன்பர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அறிவியலை வளர்ப்பதே நமது பணி. எனவே திரவமிலாப் பாரமானி என்று கூறி இத்திருத்தத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கிறேன்.

மொழிநூ: அஃது அனிராய்டு என்றே இருக்கட்டுமே!

அருகில் இருந்த ஒருவர் மொழிநூல் அறிந்த அறிவியலாளரை இடித்துரைக்கிறார்''ஏனய்யா வம்பு பண்ணுகிறீர்! பெரும்பேராசிரியரை மறுத்துரைத்தவர் எவருமிலர். அவர் கருத்துடன் ஒத்துப் போனால் உமக்குங்கூட பாடப் புத்தகம் எழுதும் வாய்ப்புக் கிட்டக் கூடும். ஏதோ கிறுக்கிவிட்டு 2500 உருபா வாங்கிவிடலாம். அம்மட்டுமன்றி பண்டாரகர் போன்ற உயர் பட்டம் பெற அவரது கடைக்கணிப் பின்றி எதுவும் நடக்காது. அச்சம் அறியா இளங்கன்றைப் போல் நடந்து கொள்ளாதீர்; கொஞ்சம் உலக நடப்பையும் அறிந்து கொள்ளும்''

## இரண்டாவது நிகழ்ச்சி

அறிவியலுடன் தமிழும் அறிந்த ஒருவர் தமக்கு அளிக்கப் பட்ட பாடப்பகுதியை நடத்துங்கால், அதில் வரும் வரையறை (definition) யைக் கரும்பலகையில் தக்கவாறு எழுதி ''தமிழில் எழுதப் பட்ட இந்த வரையறை யாவருக்கும் எளிதாய் விளங்கு கின்றதன்றோ? இதில் ஏதேனும் சிக்கலோ குறைபாடோ உள்ள தெனின் தெரிவியுங்கள்" என வேண்டினார். அனைவரும் பொருத்த மாக உள்ளது என்றனர். உடனே அவர், ''இந்த வரையறையையே மீண்டும் ஒருமுறை கவனியுங்கள்! இது அகவற்பாவில் அமைந் திருப்பதை அறிவீர்கள்" என்றார். இதனைக் கண்ணுற்ற ஆசிரியர்கள்

அனைவரும், ''உரைவடிவிற் கூறப்படும் நெறிகள், நெறிமுறைகள், நூற்பாக்கள் முதலியன பாவடிவிலும் அமைபக்கூடியனவாயின் மாணவர்கள் அவற்றை எளிதில் மனத்தில் இருத்த இயலும்.'' என்ற கருத்தை ஆதரித்தனர்.

'மரத்தில் மறைந்த மாமத யானை'யை அறியாத பெரும் பேராசிரியர் எழுந்தார்: ''நாம் அறிவியலை வளர்க்கத்தான் இங்குக் கூடியிருக்கிறோம் என்பதை அனைவரும் மறந்து விடுகிறோம். ஒருவர் பாட்டாய் எழுதுவார். பின்னர் அதற்கு உரைகூற ஒரு தமிழாசிரியர் வேண்டும். அதற்கு உரை மறுப்பு ஒன்று எழும். இந்த 'அபத்தத் துக்கு' அளவில்லாமல் போய்விடும்; இத்துடன் இதனை நிறுத்துக'' என்றார்.

இக் கூற்றுகளில் எவ்வளவு உண்மையுள்ளது என்பதை அன்பர்கள் உய்த்துணர வேண்டி, நமது தென்மொழியன்பர் ஒருவர் எழுதிய புகுமுகவகுப்புக்குரிய பூதநூற் (Physics) பகுதியில் வரும் இலக்கணங்களையும், நெறிமுறைகளையும் வரையறைகளையும் தொடர்ந்து வெளியிடுகிறோம். இவ்வாறே ஒவ்வொரு துறையினரும் தூயதமிழில் வரையறைகளை எழுதித் தமிழுக்கு அறிவியலணி பூட்டுமாறு தென்மொழி வேண்டுகிறது. இவ்விடத்தில் ஒரு முகாமையான கருத்தையும் நினைவு கூர வேண்டுகிறோம்: அறிவியல் நெறிமுறைகளைப் பாவடிவில்தான் கூற வேண்டும் என்பது கட்டாயம் அன்று. உரைவடிவில் உள்ள நெறிகள் பாவடிவிலும் அமையக் கூடியனவாயின் நனிநன்று.

தூயதமிழை நிலைநிறுத்தக் கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் பல இடர்ப்பாடுகளுக் கிடையேயும் தொடர்ந்து பணி செய்யும் நமக்கு மகிழ்வூட்டும் செய்தி, அறிவியலாளர்களும் தூய தமிழை விரும்பு கிறார்கள் என்பதே. அறிவியல் தமிழ்ப் பயிற்சி வகுப்புகளில் தூய தமிழ் அறிவியலாளர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்ற நிலையில், இந்தத் திசம்பர்–சனவரியில் மதுரைப் பல்கலைக் கழகத்தார் நடத்திய வகுப்புகளில் தூயதமிழ் அறிவியலாளரை விரும்பி வரவழைத்து அவர்களும் கலந்து கருத்துக் கூற ஏற்பாடு செய்த அதன் இயக்குநரான நாகமலை வெள்ளைச்சாமி கல்லூரி முதல்வர் பேராசிரியர் திரு. சக்திவேலரும், அக்கல்லூரிப் பூதநூற் பேராசிரியர் திரு. எமர்சன் மங்களராசரும் பெரிதும் பாராட்டுக் குரியவர்கள்.

குறிப்பு: இனி வரும் அறிவியல் நெறிமுறை வரையறைகளைப் பயன் படுத்த விரும்புவார், எழுதிய ஆசிரியரின் இசைவைப் பெறுக.

பூதநூல்: பொருண்மை ஆற்றற் குணநலன் களைவிரித்
துரைத்தா ராயும் அறிவியல் பூதநூல்.

## I. அளவீடு

1. அலகு எனப்படுவது எந்த ஓர் அளவை (quantity) யும் அளக்கும் படித்தரம் (Standard) ஆகும். அவைதாம் (1) அடிப்படை அலகு (fundamental unit) அன்றித் தற்சார்பலகு (independent unit) (2) வருவித்த அலகு (derived unit) அன்றி மற்சார் பலகு (dependent unit) என இரு பெரும் பிரிவுக்குள் அடக்கம். நீளம், நேரம், நிறை, வெப்பநிலை என்னும் நான்கும் அடிப்படை அலகுகள். மின்னோட்ட வலிமை (current intensity) ஒளிவுச் செறிவு (luminous intensity), பொருளளவு (amount of substance) -இவை அடிப்படை அலகுள் அடக்கவும் படும். ஏனைய அனைத்தும் வருவித்த அலகே. கோண அளவுத் துணையலகு (supplementary unit) இரண்டும் உள்ளன.

(அகவல் யாப்பு)

அலகெனப் படுவது எந்தவோர் அளவையும்
அளக்கும் படித்தரம் ஆகும்; அவைதாம்
அடிப்படை அலகன்றித் தற்சார் பலகு
வருவித்த அலகன்றி மற்சார் பலகென
இருவகைப் பெரும்பிரி வுக்குள் அடக்கம்;
நீளம் நேரம் நிறை,வெப்ப நிலையெனும்
நான்கும் அடிப்படை அலகு;மின் னோட்ட
வலிமை ஒளிர்வுச் செரிவுபொருள் அளவு-இவை
அடிப்படை அலகுள் அடக்கவும் படுமே!
ஏனைய அனைத்தும் வருவித்த அலகே;
கோண அளவுத்துணை அலகிரண் டுண்டே!

2. வெர்னியர் (vernier): முதற்கோற் (main scale) சிறு பிரிவுப் பின்னப் பகுதியை அளக்கப் பயன் படும் துணைக்கோல் (subsidiary scale) வெர்னியர்.

(நூற்பா யாப்பு)

முதற்கோற் சிறுபிரிவுப் பின்னப் பகுதியை
அளக்கப் பயன்படும் துணைக்கோல் வெர்னியர்

3. நுண்ணியம் * (least count or instrumental constant): அளவிடு கருவியின் நுண்ணியம், அதனால் அளவிடும் மிகச்சிறு அளவே ஆகும். வெர்னியர் அளவியல் முதற்கோற் பிரிவு வெர்னியர்ப் பிரிவுதம் வேறுபாடாகும். திருகுமானியில் (screw gauge) தலைக்கோலின் ஒரு பிரிவுக்குத் திருகுத்தளம் நகரும் தொலைவாம். நுண்ணிய மதிப்பு, புரியத்தை (pitch) த் தலைக்கோல் (head scale) மொத்த எண்ணிக்கையால் வகுக்கவும் கிடைக்கும்.

அளவிடு கருவியின் நுண்ணியம் அதனால்
அளவிடும் மிகச்சிறு அளவே ஆகும்:
அதுவே,
வெர்னியர் அளவியில் முதற்கோற் பிரிவு-
வெர்னியர்ப் பிரிவுதம் வேறுபா டாகும்.
திருகு மானியில் தலைக்கோ லின்ஒரு
பிரிவுக்குத் திருகுத் தளம்நகர் தொலைவாம்
நுண்ணிய மதிப்பு, புரியத்தைத் தலைக்கோல்
மொத்தஎண் ணிக்கையால் வகுக்கவும் கிடைக்கும்;

4. திருகின் புரியம் (pitch of the screw), அடுத்தடுத்து அமைந்த இரு புரியிழை (screw thread) களின் இடைப்படும் தொலைவாம். புரியமும், திருகின் ஒரு முழுச்சுற்றுக்கு அதன் தளம் நகரும் தொலைவும் சமம்.

திரிகின் புரியம் அடுத்தடுத் தமைந்த
இருபுரி யிழைகளின் இடைப்படும் தொலைவாம்.
புரியமும், திருகின் ஒருமுழுச் சுற்றுக்கு
அதன் தளம் நகரும் தொலைவும் சமமே!

5. அடர்த்தி: ஓரலகுப் பரும நிறையே அடர்த்தி

6. ஒப்படர்த்தி: தருபொருள் நிறைக்கும் அதன்சமப் பரும
நீரின் நிறைக்கும் -அல்லது நீரின்
அடர்த்திக்குச் சார்புறும் பொருளின் அடர்த்திக்கு
உள்ள தகவுஒப் படர்த்தி யாகும்.

* நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் (திருக்குறள்: 710) நுண்ணியம் என்னும் திண்ணிய தமிழ்ச்சொல் இருக்க, அதம அளவையும், மீச்சிற்றளவையும் கொண்டது விடா மனத்தினர் தொடர்ந்து எழுதித் தமிழ்க்கேடு புரிகின்றனர்.

## விசையியல் MECHANICS *

பொருளில் விசைசெயற்படுவதைப் பற்றிய அறிவியற் படிப்பு விசையியல் ஆகும். விசைச்செயலால் பொருள் இயங்குவது விசையியக்கவியல்; விசைச்செயலால் பொருள் நிலை (யாய் இரு)ப்பது விசைநிலைப்பியல்.

பொருளில் விசைசெயற் படுவதைப் பற்றிய
அறிவியற் படிப்பு விசையியல் ஆகும்.
விசைச்செய லால்பொருள் இயங்கினுல் விசையியக்க
வியல்;அன் றி நிலைப்பின் விசைநிலைப் பியலே!

திசையுளி (vector) (அளவீட்டு)மதிப்பும் திசையும் உடையது; திசையிலி (scalar) மதிப்பு மட்டுமே உடையது.

திசையுளி மதிப்பும் திசையும் உடையது
திசையிலி மதிப்பு மட்டுமே உடையது (தொடரும்)

* "Mechanics is the science of the action of forces on bodies" என்ற பொருளைச் சற்றும் உணராது, mechanic(s) என்ற ஒலிப்பைக் கேட்ட மாத்திரத்திலேயே அதனை எந்திரத்துடன் தொடர்பு படுத்தி 'எந்திரவியல்' என மூங்கைத் தனமாய் மொழி மாற்றினர். விசையெது? எந்திரம் எது? அத்தோடு அமையாது தமக்குற்ற பதவிச் செருக்கினுல் இது போன்ற தம் சொற்களையே எல்லாரும் பயன்படுத்த வேண்டும் என அறிவு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை இடுவது எத்துணை கொடிது! இவர் தம் ஆங்கிலத் திறனை எண்ணி அரற்றுவதா? பூதவியல் துணிவை எண்ணி அழுவதா? தமிழறிவைக் கண்டு நகைப்பதா?


"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 12 உருபா | 15 உருபா | 20 உருபா. |
| அரையாண்டுக் கட்டணம்: | 6 உருபா | 7-50 | 10 உருபா. |
| தனியிதழ்: | 1 உருபா | 1-25 | 1-75 |

ஓரிதழுக்கு உருபா. 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# வறுமை ஒழிந்ததா? செயலில் காட்டுவோம்!

—பெருஞ்சித்திரன்.

எண்ணருங் கோடிப் புதுமைகள் செய்தார்;
இலக்கியம் பற்பல கோடி வரைந்தார்!
விண்ணெழுந் தளாவிக் கோள்களை யளந்தார்;
வேற்றுல கங்களைக் காணத் துடித்தார்!
பண்ணெழுந் திசைத்துத் தாளங்கள் சேரப்
பற்பல கலைகளில் ஆடித் திளைத்தார்!
மண்ணெழுந் துயிர்த்தே ஏழையாய் மாளும்
மாந்தனும் உய்ந்திட யாதுசெய் தாரே?

வானுயர் மாளிகை, கோபுர வாயில்,
வளாகப் பொழில்மனை, குளிநீர்க் குளங்கள்,
கானல் அறைகள் கடற்கரைச் சோலை,
கண்ணைக் கருத்தை மயக்கிடுங் காட்சி,
தேனவிழ் பூங்கா, திரைப்படக் கூத்தெனத்
தேடா நலன்கள் ஆயிரஞ் செய்தார்;
ஊனிலா உடம்பில் எலும்புகள் தைக்க
உலாவிடும் மக்களுக் கென்னசெய் தாரே?

முத்தும் பவழமும் யாத்தபொன் னகைகள்;
முகத்திலும் கழுத்திலும் நறுமணப் பொடிகள்!
புத்தம் புதியவாய்ப் பொலிந்திடும் உடைகள்;
போய்வரும் ஊர்திகள்— யாவையும் செய்தார்;
தொத்தும் குழந்தைகள்— தோலுரு வங்களைத்
தூக்கிய தாய்களா கூடுக ளா—வெனச்
செத்தும் பிழைத்தும் வாழலும் இன்றிச்
சீரழி கின்றவர்க் கேதுசெய் தாரே?

சட்டமும் திட்டமும் பற்பல செய்தார்;
சாலைகள் சோலைகள் ஆலைகள் செய்தார்!
கட்டிய அணைகளால் நீரையும் வளைத்தார்;
கழனிகள் ஆயிரம் விளைந்திடச் செய்தார்!
கிட்டிய பற்களும் கிடத்திய உடலுமாய்க்
கீழ்மைத் தெருவில் குளிரினில் தூங்கி,
ஒட்டிய வயிற்றோ டுலாவரு கின்ற
உயிர்வாழ் கூடுகள் வாழஎன் செய்தார்?

பாலிலும் தேனிலும் பழச்சுளை கலந்து
பனிக்குழை யிட்டுப் பசியிலா தருந்திக்
காலிலும் கையிலும் மண்படா துலவும்
கயமை மாந்தர் கைதொழற் கென்று,
மாலையும் சிவனையும் தேரினில் ஏற்றி
மத்தளங் கொட்டி விழாப்பல செய்தார்!
சேலையும் வேட்டியும் வானமாய் நிற்கும்
சில்லறை உயிர்கள் வாழஎன் செய்தார்?

திருப்பதி பழனி குருவா யூரெனத்
திரைப்பட நடிகரும் நடிகையும் வாங்கும்
கருப்பண உண்டியல் கொட்டி யளக்கும்
கணக்கிலாக் கோயில்கள் பற்பல வெடுத்தே,
உருப்பசி அரம்பையர் மேனகை என்ன
உலாவரும் பெண்டிரைக் குலாவிடச் செய்தார்!
தெருப்படி யோரம் இராப்பகல் வீழ்ந்து
தீப்பசி தின்றிடும் அவர்க்கெது செய்தார்?

கணக்கிலாக் கட்சியும் தலைவரும் தோன்றிக்
காலையும் மாலையும் கூக்குர லிட்டார்!
பணக்குவை மாலைகள் பொன்னிழை ஆடை
பளபளத் திடவும் உலாப்பல வந்தார்!
உணக்கிடுங் கருவா டாய்த்தெரு வோரம்
உலர்ந்திடும் வயிறுகள் வாய்களும் காயப்
பிணக்குவி யல்போல் புழுதியிற் புரளும்
பீற்றல் உடைகளுக் கென்னலம் செய்தார்?

பொத்தகங் கோடி எழுதிக் குவித்தோம்;
புன்மைக் காட்சிகள் படங்களாய் எடுத்தோம்!
மெத்தவும் நாடகம், திரைப்படம், மேடை,
மேன்மை வானொலி யாவிலும் "வறுமை
செத்தது; வளமை செழித்த"தென் றேபல
சிந்துகள் இசைத்தோம்; கதைகளும் வடித்தோம்!
கத்தலில் காட்சிகள் மறைவது மில்லை;
கைகளால் செய்து காட்டுவோம் வாரீர்!

---

*இப் பாடல் 'உரிமை வேட்கை' பொங்கல் மலரில் (1975) வெளி வந்தது. அன்பர்களின் பயன் கருதி இங்கு மீண்டும் வெளியிடப் பெறுகிறது.*

# ஓ... ஓ... பொதுவுடைமைத் தோழனே-2.

—(பூளைமேட்டார்)—

எய்தவர் இருக்க அம்பை நோகும் எழுத்தாளரின் எழுத்துப் பே(ா)ர் ஆட்டத்திற்கு முன்னுரை:

சிறிய வாசகர் வட்டத்தையுடைய தென்மொழியில், அதன் ஒரு சிறு வாசகர்களில் கடைநிலை வாசகர்களாகிய நாம்-பூளைமேட்டார்—[தணிகையாரின் எழுத்தில் கூற வேண்டுமேயானால்' முதலாளிகளின் கூலி எழுத்தாளர்கள்'] எழுதிய ஓ..ஓ..பொதுவுடைமைத்தோழனே..!' என்ற கட்டுரைக்கு, பெரிய—மன்னிக்கவும்—மிகப் பெரிய வாசகர் வட்டத்தையுடைய 'செம்மலரில்' அதன் தலை சிறந்த புரட்சிப் படைப்பாளிகளில் ஒருவரான 'தணிகைச் செல்வனுர்' ஒரு மறுப்புக் கட்டுரை எழுதியுள்ளார். நாட்டிலே அவ்வப்பொழுது தோன்றுகின்ற நச்சுக்கருத்தை உடனுக்குடன் சந்திக்க வேண்டும் என்ற கடமையுணர்வு உந்தித் தள்ள, அவர் அக்கட்டுரையை எழுதியுள்ளார். [செம்மலர், திசம்பர், 1974 பக்கம் '40'-தமிழகத்தில் சில பகுதிகளில் அரும்புகிற 'விசக்'கருத்தை அப்போதைக்கப்போது சந்திக்க வேண்டிய கடமைக் கருதி எழுதியுள்ளோம்.'] செல்வனுரின் கடமையுணர்வுக்கு நம் பணிவு கலந்த வணக்கங்கள். தென்மொழி வாசகர் வட்டத்தைச் செல்வனுர் எப்போது கணக்கு எடுத்தாரென்றே செம்மலர் எத்தனைப் படிகள் விற்பனையாகின்றன என்றே நாம் அவரைக் கேட்கப் போவதில்லை. ஏனெனில், மார்க்கியப் பொதுவுடைமைக் 'கட்சி'க் காரரில்லையா? புள்ளி விளத்தங்களுடன்தாம் பேசுவார்! ஆனுல், ஒரே ஒரு கேள்வி. ஆமாம். 'தென்மொழி' என்ன நேற்றுத் தான் அந்தக் கருத்துகளை எழுதி வந்ததா? பத்துப் பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து அன்றே 'தமிழக விடுதலை' முழக்கத்தை முழங்கி வருகின்றது. இத்துணைக் காலமாய்த் தணிகையாரின் கடமையுணர்வு எங்கே போய் ஒளிந்து கொண்டிருந்தது? இன்று திடீரென்று பொத்துக் கொண்டு வர! 'திடீரென்று பொத்துக் கொண்டு வந்த கடமையுணர்வின்' விரைவோ என்னவோ தெரியவில்லை, செல்வனுர்க்கு நமது தலைப்பைக் கூடச் சரியாகப் படிக்க முடியவில்லை, தலைப்பையே சரியாகப் பார்க்காதவர் கட்டுரையின் கருத்துகளை எங்கே விளங்கிக் கொண்டிருப்பார்' என்று கேட்டுவிடாதீர்கள்-நிலைமையே அதுதான். ஆனுல் அவரைச் சொல்லிக் குற்றமில்லை; கடமையுணர்வின் விரைவு அப்படிப்பட்டது. தணிகைச் செல்வனுரின் விரைவு தணிந்திருக்கும்

என்று நம்புகிறோம். இப்போது அவர் அவராகவே இருப்பார் என்றும் நம்புவோமாக, அந்த நம்பிக்கையில்தான் இந்தக் கட்டுரை எழுதப்படுகின்றது.

(அ) "சிவந்த வெண்மையும்
தெற்கு-வடக்குத் தெரியா வரலாறும்"

நாம் நம்முடைய கட்டுரையில் வலியுறுத்த வந்த அடிப்படைச் செய்தி என்ன? 'தமிழகம் ஓர் அரசியலடிமை நாடு. முதலில் இவ்வடிமை நிலைமையை நீக்கினால்தான் முதலாளியத்தைத் துடைத்தெறிய முடியும்' என்பதே. அரசியலடிமை நாடு என்பதின் பொருள் முற்றாளுமைகளுக்கும் நிலக்கிழார் ஆளுமைக்கும் உட்பட்ட நாடு என்பதே. தமிழகம், துணைக் கண்ட முற்றாளுமைக்கும், உலக முற்றாளுமைகளான அமெரிக்கா (பழைய), உருசியா (புதிய) முற்றாளுமைகளுக்கும் உட்பட்ட சுரண்டப்படுகின்ற நாடு. இங்கு உரிமையுள்ள நாட்டரசு (தேசிய அரசு) ஏற்படவில்லை. முதலாளியம் என்ற சொல் நிலக்கிழார் ஆளுமையும் உட்கொண்ட ஏற்றத் தாழ்வுகள் உள்ள குமுகாய அமைப்பையே குறிக்கும். எனவே, இங்கு நடத்தப் படுகின்ற புரட்சி நாட்டு விடுதலையுடன் ஒன்றிய-நாட்டு அரசை ஏற்படுத்தக் கூடிய-முற்றாளுமைகளுக்கும், நிலக்கிழார் அமைப்புக்கும் எதிரான புரட்சியாகவே இருக்கும். இத்தகைய புரட்சியே, இங்கு இயலக் கூடியது; இதுவே நடைமுறைக்கும் ஒத்த போர்விரகு. நமது இந்த அடிப்படைக் கருத்தை விட்டு விட்டுச் செல்வனார், நம்மை இனவாதக் காரராகக் காட்ட முனைகிறார். மார்க்கியம் வெறும் வாய்ப்பாடமாகவே இருந்தது போதும் செல்வனாரே! நடைமுறைப் படுத்த வாருங்கள். நடைமுறை உண்மைகளை நுனித்தறிய முயலுங்கள்.

2 அடுத்து நமது கட்டுரையில் தமிழகத்தின் இன்றைய அரசியல், பொருளியல் குமுகாய நிலைகளை விளக்குவதின் வழி, கடந்தகால வரலாற்றை ஆய்ந்துள்ளோம். நம்முடைய தமிழகம் உள்ளிட்ட துணைக்கண்ட [பெரும் தமிழ் நில] வரலாறு எவ்வாறு . இத்துணைக் காலமாகத் தவறாகவே எழுதப்பட்டு வந்துள்ளது என்பதையும், எப்படி மார்க்கியம் பேசுகின்றவர்களே அவ்வரலாற்றை 'ஆரிய வரலாறு' ஆக்கிக் காட்டியுள்ளனர் என்பதற்குத் தோழர் 'தாங்கே'யின் நூலையே மேற்கோள் காட்டி

அஃது, எவ்வாறு தவறானது என்பதையும், சரியான வரலாற்றை எழுத வேண்டும் என்றால் வரலாற்றைத் தெற்கிலிருந்து தொடங்க வேண்டும் என்பதையும் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளோம். **நம்முடைய ஆய்வுக்கு அடிப்படை குமரிக்கண்டமாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளோம்.** 'மறுப்பு' என்ற பெயரில் திருமிகு தணிகைச் செல்வனார், தாம் குழம்பியதுமின்றி வாசகர்களிடையே நம்மையும் குழப்பக் காரர்களாகச் 'செம்மலர்' இதழ் மூலம் காட்ட முயன்றுள்ளார்.

## (ஆ) "உயிர் மூச்சும் வாய்ப் பேச்சும்"

நம் கட்டுரையின் தலைப்பை மாற்றி விட்டு, உயிர் மூச்சையே தணிக்கை செய்து விட்டு—நாம் நம் கட்டுரையை எந்த அடித் தளத்தின் மீது கட்டினோமோ—பாவாணரின் மொழிநூல் ஆய்வும், அதன்வழி, கிடைக்கின்ற குமரிக்கண்ட உண்மையையும் மறைத்து விட்டு-நம் கருத்துகளை நச்சாக்கி உள்ளார் - செல்வனாரே! உமது தலைவர்களிடமிருந்து கற்ற 'சாணக்கிய வேலையை' நிறுத்திக் கொள்ளும்.

இதோ, நாம் வைக்கின்ற வரலாற்று உண்மை இவைதாம்:

1 குமரிக் கண்டம் கடல்கோள் கொள்ள அங்கிருந்து வடக்கில் வந்து பனிமலை உயர்ந்த பின்பு நாவலந்தேயம் முழுதும் வாழ்ந்தவர் தமிழரே.

2 அவர்கள் ஆரியர் இந்நிலத்துக்குள் காலடி எடுத்து வைக்கும் முன்பே நாட்டினம் என்ற நிலையைக் கடந்து விட்டார்கள்:

3 அங்கு 'அரசு' உள்ளது; 'மொழி' உள்ளது. நில அமைப்பால் உருவான பண்பாட்டு நிலைகள் உள்ளன.

4 ஆரியர்கள் இங்கு வரும்பொழுது நிலக்கிழார் ஆளுமையும், வணிக ஆளுமையும் உள்ள குமுகாய அமைப்பே நிலவி வந்தது.

இத்தகையதொரு நாட்டினத்தின் மீது 'ஆரியர்' தங்கள் தாக்குதலைத் தொடங்கி வெற்றியும் சூடுகின்றனர். [பார்க்க: தென்மொழி சுவடி: 11, ஓலை: 12. பக்கம்: 22, 23, 24]; ஆரியர் வரும் முன்பே 'தமிழே,' 'திரவிடம்' ஆகிவிடுகிறது. ஆரியவருகைக்குப் பிறகு, வடக்கு ஆரிய வர்த்தனம் ஆகிறது. பின், ஆங்கிலேயர் வந்ததும், இன்றைய இந்தியா ஆகின்றது. திரும்பத் திரும்ப,

இவற்றை விளக்கத் தொடங்கினுல், கூறியது கூறலாகும் என்பதால், செல்வனுரே! மீண்டுமொரு முறை நமது கட்டுரையைப் பாருங்கள். மேலோட்டமாகக் கிடைக்கின்ற செய்திகளை வைத்துக்கொண்டு தருக்கம் ஆடுவது உண்மை மார்க்கியருக்கு அழகன்று.

## (இ) "இனத்தோடு இனம்"

இனி நம்முடைய கட்டுரையை விட்டு விட்டு, செல்வனுரின் கட்டுரைக்குள்ளே நுழைவோம். (1) 'இனம்' என்ற [புதுச் சொல்!] பொதுச்சொல் நாட்டினம், வண்ண இனம் என்ற இரண்டையும் குறிக்கிறது என்கிருர் செல்வனுர். Racc—இனம்-என்ற சொல் ஒரே மூலக்கூற்றையுடைய பல்வேறு நாட்டினங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் பொதுச்சொல். [Race - Tribe or Nation (Group of Tribes or Nations) showing or thought to have the same Original ancestors]. ஒரே மூலக்கூற்றிலிருந்து பல்வேறு இனங்கள் கிளைத்த பிறகே ஒட்டு மொத்தமாக அவ்வினங்களை அம மூலக்கூற்றின் பெயரில் அழைக்கிறேம். இவ்வாறுதாம் கிரேக்கம் இலத்தீனம் போன்ற ஐரோப்பிய மொழிகளும், அவ்வினங்களும் ஆரியக் குடும்பம் ஆவது. 'திராவிடம்" என்பதை விளக்கினுல் செல்வனுர்க்கு இன்னும் தெளிவாகும் என்று நினைக்கிறேம். ஆரியர் வருகைக்கு முன்பே மொழி நிலையில் இனப்பெயர் பெற்றுவிட்ட தமிழினம் இங்கு வாழ்ந்தது என்பதை மேலேயே குறிப்பிட்டுள்ளோம். 'தமிழ்' என்ற இச்சொல்தான் வடக்கே செல்லச் செல்ல திரிந்து திராவிடம் ஆகிறது. வெளிநாட்டார், தமிழைக் குறிக்கத் தான் 'திராவிடம்' என்ற சொல்லைப் பயன்படுத்தினர். தூத்துக்குடி—'டூட்டுக்குரின்'- ஆவது போலவும், கோழிக்கோடு 'கேலிக்கட்' ஆவது போலவும், காளிக்கோட்டம் 'கல்கத்தா' ஆவது போலவும் சாம தமிழும்-த்ரமிள-திரவிட-திராவிடம் ஆனது. மார்க்சு, 'திராவிரம்' என்ற சொல்லை தனது இந்திய வரலாற்றுக் குறிப்புகளில் பயன் படுத்தியுள்ளார்.

இஃதெல்லாம் பாவாணரின் நூற்களை ஒருமுறைபாவது தொட்டுப்பார்த்திருந்தால் தெரியும். தமிழ் மொழியையும், தமிழ் இனத்தவரையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட இச்சொல்—திராவிடம்-பிறகு அம்மொழியிலிருந்தும், அவ்வினத்திலிருந்தும் கிளைத்த மொழிகளையும், இனங்களையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. [ஆரியத்தில்

இருந்து கிளைத்த மொழிகளையும், இனங்களையும், குறிக்க 'ஆரியம்' பயன்படுவதைப்போல்] தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு இன்னும் பிற திருந்தாத் தமிழ்க் கிளைமொழிகளையும் குறிக்கவே 'திராவிடம்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய மொழிகளையும், அம்மொழி வழி இனங்களையும் 'திராவிட மொழிகள்' என்றும், 'திராவிடர்' என்றும் கூறுவதற்குக் கரணியம் அவை 'தமிழ்' மூலத்தைக் கொண்டுள்ளது என்பதே. 'பிராமணரை' ஆரியர் என்பதற்குக் கரணியம் அவர்கள் 'ஆரிய இனக்கொழுந்துகள்' என்பதனாலேயே. இன்று நாம் பொதுவாக அவர்களை 'ஆரியர்' என்றழைத்தாலும், சிறப்பாக 'ஆரியப் பார்ப்பனர்' என்றே அழைக்கிறோம். ஏனெனில், ஆரியர் இந்நிலத்தில் குடியேறு முன்பே இங்குப் புலவர்களும், சான்றோர்களும் பார்ப்பனர் என்றும், அந்தணர் என்றும் அழைக்கப்பட்டனர். அவர்களிடமிருந்து இவர்களைப் பிரித்துக்காட்டவே, 'ஆரியப் பார்ப்பனர், என்று அழைக்கிறோம்.

(ஈ) "குழம்புவாரைக் குழம்புவாரே காமுறுவர்"

செல்வனூர், அடுக்கிக் காட்டும் குழப்பங்கள் மூன்று. முதலில் (1) அவர், தேசிய இனத்தை [நாட்டினத்தை] வரையறுக்கிறார். 'நில வகையில் தொடர்ந்து, ஒரே நிலப்பரப்பில் வாழ்ந்து, வரலாற்று வகையில் ஒரே மொழி பேசிவரும் மக்கள், ஒரு மொழிவழி நாட்டினமாகக் கருதப்படுவர். இது மார்க்கியம், நாட்டினத்திற்குக் கொடுக்கும் வரையறுப்பு. இதே வரையறுப்பைத்தான் நாமும் பயன்படுத்தி, ஆரியர் வருகைக்கு முன்பே இங்கு வாழ்ந்த இனத்தை மொழிவழிப் பெயர் பெற்றுவிட்ட இனம் என்கிறோம். ஆரியர் வருகைக்குப் பின்பு மொழி, இனக்கலப்பு ஏற்படுகிறது. ஒரு மொழி, ஓரினம் என்ற நிலை மாறி, வரலாற்றின் வளர்ச்சிப் போக்கிலே பல மொழிகள், அம்மொழி நாட்டினங்கள் ஏற்படுகின்றன. ஆரியரின் வேதமொழி சமசுக்கிருதம் ஆகிறது. ஆரியர்கள் குமுகாயத்தில் ஆளுமை பெற்றவுடன் சமசுக்கிருதம், இலக்கிய, சமயத் துறையிலும், தன் ஆளுமையைச் செலுத்துகிறது. ஆரியர்கள் தேவர்கள் ஆகின்றனர். சமசுக்கிருதம் 'தேவமொழி' ஆகின்றது. அன்று தொடங்கிய இந்த ஆளுமை, இன்றும் தொடர்ந்து நீடிக்கிறது.

(க) ஆரியம் என்பதற்கு ஒரு மொழியும் நாடும் எங்கே என்று கேட்கும் செல்வனூரே, உங்கள் 'செம்மலர்' தாள் உரிமை விளத்த-

அறிக்கையில் நாட்டினம் [Nationality] என்பதற்கு எதிராக 'இந்தியன்' என்று போட்டிருக்கிறார்களே, இதன் மொழி என்ன? இதன் நில அமைப்பு என்ன? நமக்குச் சிறிது விளக்கமுடியுமா?

(உ) சமசுக்கிருதம், இலக்கிய மொழியாகச் சிறுத்து விட்டது என்று எழுதியுள்ள செல்வனாரே, அந்த அரைச் செயற்கை நடைமொழியை இன்னும் விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டு, எல்லா நிலைகளிலும் திணிக்கும் முயற்சி நடந்து கொண்டிருப்பது தங்களுக்குத் தெரியாதா?

(கூ) மறைமலையடிகளால், 'தமிழ்' தனித்து இயங்க வல்லது எனக் காட்டப்பட்டுப், பாவாணரால் சமசுக்கிருதம் உட்பட உலக மொழிகளுக்கே மூலம் 'தமிழ்' என்று நிறுவப்பட்ட பிறகும் சமசுக்கிருதமின்றித் 'தமிழ்' தனித்து இயங்காது என்று எங்கும் பரப்பி வருவதும், தொடர்ந்து ஆரியக் குஞ்சுகள் தமிழில் வலிந்து சமசுக்கிருதச் சொற்களையே கலப்பதும், தமிழுக்குச் சமசுக்கிருதம் மூலம் என்று காட்டிக் கதைப்பதும் செம்மலருக்கோ, செல்வனாருக்கோ தெரியாதா? ஏன், உங்களிதழில் அண்மைக் காலத்தில் பெயர்களில் மட்டும் [சில பாடங்களில் புறநடையாக] காய்கதிர்ச் செல்வன், தணிகைச் செல்வன், நெல்லைச் செல்வன், செங்கீரன், கதிரவன் போன்று மாறியுள்ளதே தவிர கலப்பு நடையைத்தானே உள்ளே கையாளுகிறீர்கள்.

(ச) இவை எல்லாம், மொழி ஆளுமை இல்லையா? சமசுக்கிருதம் இலக்கியச் சிறு மொழியாகச் சிறுத்துவிட்டது என்பதால், அதன் ஆளுமை இல்லை என்பது போலக் குறிப்பிட்டுள்ள செல்வனாருக்கு அண்மைக் காலச் செய்திகள் சிலவற்றைக் கொடுத்துள்ளோம் அவற்றிற்குப் பெயர் என்னவென்று அவர் நமக்கு விளக்குவாரா?

தினமணி: திசம்:29 சமசுக்கிருதத்தைக் கட்டாயப்பாடம் ஆக்கக் கோரிக்கை என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தி இது. சமசுக்கிருதக் கல்வி மகாநாட்டை தொடக்கிவைத்துப் பேசிய நடுவண் கப்பல் போக்குவரத்து அமைச்சர், சமசுக்கிருதம் கட்டாயப் பாடம் ஆகவேண்டும் என்று கூறியுள்ளார். 'சமசுக்கிருதத்தில் பெரும் பொக்கசம் உள்ளது என்றும், சமசுக்கிருதமில்லாமல் உண்மையான இந்தியாவை நினைக்கமுடியாது' என்றும் அவர் கூறினார்.

இரண்டாம் நிலைக் கல்வி நடுவண் அமைப்பில் 12 ஆண்டு படிப்புத் திட்டத்தில் சமசுக்கிருதம் இடம்பெறும் என்று துணைக்கல்வி மந்திரி டி. பி. யாதவ் கூறினார்.

காஞ்சிக் காமகோடி: (தினமணிச் செய்தி) ‘ சமசுக்கிருதம் செத்துவிட்ட மொழியன்று; எல்லா மொழிகளும் சமசுக்கிருதத்தி லிருந்துதான் தோன்றின’.

‘தக்கிண பாரத இந்திப் பரப்புச் சவையிதழ் பாரதவாணி: ‘திராவிட மொழிகள் அனைத்தும், சமசுக்கிருதத்திலிருந்து பிறந் தவை. தெலுங்கிலிருந்தும், கன்னடத்திலிருந்தும், சமசுக்கிருதச் சொற்களை நீக்கிவிட்டால், அந்த இரண்டு மொழிகளும் இருப்பிடம் தெரியாமல் அழிந்துவிடும் ... சமசுக்கிருதத்தின் தொடர்பை அறுத் துக்கொண்டு, தமிழால் வளரவே முடியாது’.

(ஈ) ஒரு புறத்தில் சமசுக்கிருதத்தை விடாப்பிடியாகப் பிடித் துக்கொண்டு, ஆரியர்கள் தொங்கிக்கொண்டிருக்கும் அதே சமயத் தில், இன்று அவர்களின் ‘செல்லப்பிள்ளை’ மொழியாய் இருக்கும் ‘இந்தியை’ எங்கும் திணிக்க முயற்சி நடந்துகொண்டு இருப்பதும் செல்வனுருக்குத் தெரியாத ஒன்று? சமசுக்கிருதத்தைத் ‘தேசிய மொழி” அன்று என்று மறுக்கும் செல்வனுர், இந்தியையும் அவ் வாறே மறுக்கப் போகிருரா ?

## (உ) குழம்புவார் குழம்புவாரைக் குழம்பச்செய்வர்!

(2) இனி, அவரது இரண்டாவதும், முகாமையானதுமான குழப்பத்திற்குச் செல்வோம். இதில் அவர், ‘ஆரிய - திராவிடப்’ போராட்டத்தை மறுக்கவில்லை, ஆனுல் அப்போராட்டத்தை இரண்டு பழங்குடி மக்களிடையிலே நடந்த போராட்டமாகவும், இதில் வென் றவர்களுக்கு அடிமைகள் கிடைத்தார்கள் என்ற நிலையிலும் விளக்கு கிருர். நாகரிக நிலையை அடையா இரு பழங்குடி மக்களுக்கு இடை யில் நடந்த போராட்டம் அது. ஆரிய-திராவிடக் கலப்புக்குப் பிறகே, நிலக்கிழார் ஆட்சி தொட்ங்குகிறது என்பதே அவரின் நிலை: இதையே, அவர் ‘ஆரியர்களிடையிலே, ஏர், எருதுகள் இருந்தன; திராவிடர்களிடையிலே நிலமும் நீரும் இருந்தன’ என்றும் ‘இரு சமூகங்களும் சங்கமித்த பிறகுதான் நிலப் பிரபுத்துவ உற்பத்தி முறைகளும், அதற்காக ‘உழைப்பை’ அடிமை கொள்ளும் சூத்திர முறைகளும் உருவாகின’ என்றும் கூறுகிருர்.

(3) செல்வனாரின் 'மூன்றாவது குழப்பமும்' இதனடிப்படையாக அமைக்கப்பட்டதே. ஐயா! செல்வனாரே, நமது நிலை இதற்கு நேர் எதிரானது இல்லையா? ஆரியர் இங்கு வருவதற்கு முன்பே 'இனம்' என்ற நிலையை-அஃதாவது, மொழி நிலையிலும், விளைவிப்பு உறவுகள் வளர்ந்துவிட்ட நிலையிலும், அரசு ஏற்பட்டு விட்ட நிலையிலும்—அடைந்துவிட்ட மக்களையே ஆளுமைப்படுத்து கின்றனர். தங்களுடைய மேற்கூறிய ஆய்வுகள் எல்லாம், வையாபுரித் தமிழ்ப் பேராசிரியர்களின் - நீலகண்டக் கோடன்மார்களின்—ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதெனக் கூறி அன்றே நமது கட்டுரையில் அவற்றை மறுத்து இருக்கிறோம். செல்வனாருக்கு நமது நிலையை இன்னும் சிறிது விளக்க முயலுவோம்.

'இந்திய ஆரியர்கள், இந்தியாவிற்குள் புகுந்தபோது, கிரேக்கத்திற்கு நெருங்கிய மொழியைப் பேசிக்கொண்டு, ஆடு,மாடு மேய்க்கும் 'முல்லை நில நாகரிக' நிலையிலேயே இருந்தனர்......அவருக்கு எழுத்துமில்லை; இலக்கியமும் இல்லை. முன்னோர் வரலாற்றுக் கதைகளும், சிறு தெய்வ வழுத்துகளும் செவி மரபாகவே - [கர்ண பரம் பரையாகவே] வழங்கி வந்தன.......குமுகாய அமைப்பு முறையில், அவர் வெவ்வேறு சரவடியாகப் பிரிந்திருந்தனர். முல்லை நில நாகரிக ஆரியர்கள் இந்தியாவிற்குள் நுழையும்பொழுது இங்கு வாழ்ந்த மக்கள் நிலை என்ன? வடக்கே திராவிடமாகத் திரிந்த நிலையிலும், விந்திய மலைக்குத் தெற்கே தமிழாகவும் (திரியா நிலையில்) மொழி இருந்தது. தமிழின மக்கள் வடக்கே (திரிந்த நிலையில்) திரவிடர்களாகவும், தெற்கே (திரியா நிலையில்) தமிழர்களாகவும் வாழ்ந்தனர். பிறப்பகத்தில் இருந்து விலகிச் செல்லுகின்ற மக்கள் தட்ப வெப்ப நிலைக்கேற்ப மாறுபாடு அடைவதும், மொழியைப் பலுக்குவதில் திரிபு ஏற்படுவதும் இயற்கை. குமரிக் கண்டத்திலிருந்து வடக்கே செல்லுகின்ற தமிழர்கள், திராவிடர்களாவதும், அவர்களது மொழி 'திராவிடம்' ஆவதும் இவ்வாறே. (விளக்கத்திற்குப் 'பாவாணர்' நூற்களைப் பார்க்க). குமுகாய அமைப்பில் அவர்கள் நிலக்கிழார் ஆட்சிக் கட்டத்தில் உள்ளனர். நிலக்கிழார் அமைப்பிற்கேயுரிய தொழிற் பாகுபாடுகள் அவர்களிடையே இருந்தன.' அவை, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியவை ஆகும். எனவே, இந்தியாவிற்குள் நுழைகின்ற ஆரியர்கள் மொழியும், அரசும், பண்பாடும் பெற்ற ஒரு நாகரிக இனத்தையே ஆளுமைப் படுத்துகின்றனர். ஆரியர்கள் இங்கு நுழையும்பொழுது அவர்களிடையே பிராமணன், சத்திரியன், வைசிகன், சூத்திரன் என்ற பாகுபாடில்லை. அவர்களிடையே குலத்தலைவர்களும், பூசாரிகளுந்தாம் இருந்தனர். தொடக்கத்தில் திராவிடர்களோடு போரிட்டுப் பார்த்து, அவர்களை வெல்ல முடியாமற்போக, பிறகு அமைதியான முறையில் கலக்கத் தொடங்கினர். இத்தொடக்க காலப் போர்களே வேதத்தில் கூறப்பட்டுள்ளவையாகும். ஆனால், அவை (-மிகைப்படுத்தியும்—அவர்களை

மேமிசை மாந்தர்களாகக் காட்டுவதற்கும்,—திராவிடர்களையும்—தமிழர்களையும் மீளாத் தூக்கத்தில் ஆழ்த்துவதற்கும்) ஆரியப் பூசாரிகளால் கைக்கொள்ளப்பட்ட ஒருவகை விரகு. ஆனால், அவை ஆரிய-திராவிடப் போராட்டங்களைக் காட்டுகின்றன என்பதில் ஐயமில்லை. முதலில் வடக்கில் தங்களை நிலைப்படுத்திக் கொண்ட ஆரியர், பிறகு தெற்கே நுழைகின்றனர்.

(௧] திராவிடர்களோடும்-தமிழர்களோடும் — கலக்கத் தொடங்கிய ஆரியர், அவர்களின் மொழியைக் கொண்டு தங்களின் மொழியைச் செம்மைப்படுத்திக்கொள்கின்றனர்: தமிழ் நெடுங்கணக்கையும் பின்பற்றி வண்ணமாலை வரிவடிவும், அரைச் செயற்கை நடைமொழியும் (சமசுக்கிருதம்) அமைக்கின்றனர்.

(௨) திராவிடர்களோடும் — தமிழர்களோடும் — தொடர்பு கொண்ட ஆரியப் பூசாரிகள் தங்களது நிறத்தினாலும், தங்களது எடுப்பொலி மொழியினாலும் தங்களைத் 'தேவராகவும்", தங்களுடைய மொழியைத் தேவமொழியாகவும் காட்டிக்கொள்ள முடிந்தது.

(௩) இவ்வாரியப் பூசாரிகள் சமயத் துறையிலும், இலக்கியத் துறையிலும் காலூன்றத் தொடங்குகின்றனர்.

(௪) தொழிலடிப்படையில் இருந்த பிரிவுகள் பிறப்படிப் படையாக்கப்படுகின்றன: ஆரியப்பூசாரிகள் 'பிராமணர்கள்' ஆகின்றனர். புதிய 'நால் வரணப் பாகுபாடு' பிறக்கிறது. [பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன்] இப்படித் தொடங்கியதுதான் தமிழர்களின் அடிமைக் கதை.

ஆரியப் பூசாரிகள் தவிர்த்த ஆரியர்கள் மற்றவர்களுடன் ஒன்றிக்கலந்து விடுகின்றனர். எனவே, அவர்களை ஆரியர்கள் எனவோ, திராவிடர்கள் எனவோ வேறுபடுத்தும் நிலையிலில்லை. இவ்வாரியப் பூசாரிகள்தாம் ஏற்கனவே இருந்த தொழிலடிப்படைப் பிரிவுகளைப் பிறப்படிப் படையாக்கித் தங்களைத் தலைமைப் படுத்திக் கொள்கின்றனர். இவ்வாறுதான் பிராமணன், சத்திரியன், வைசிகன், சூத்திரன் என்ற வரணப் பாகுபாடு 'அனைத்திந்தியத் தன்மை' பெறுகின்றது. எனவே, நிலக்கிழார் ஆட்சியமைப்பிலிருந்த குமுகாய அமைப்பையே ஆரியர், தங்களின் ஆளுமைக்குக் கீழ்க்கொண்டு வருகின்றனர், 'கண அமைப்பில்' இருந்த குமுகங்கள் ஒன்று கலந்த பிறகே நிலாக்கிழார் ஆளுமை வருகின்றது என்பது வரலாற்றைத் தெற்கிலிருந்து தொடங்காமலும், வையாபுரிப் பேராசிரியர்களின் ஆய்வையே அடிப்படையாகக்கொண்டும் ஆய்வதால் ஏற்படுகின்ற தவறுகள். அவை இந்தியாவைத் தலைகீழ் ஆக்குபவை......ஏன்......மார்க்கியத்தையே ஒக்கலியம் ஆக்குபவை!

'ஆரியர்களிடையே ஏரும், எருதும் இருந்தன; திராவிடர்களிடையே நீரும் நிலமும் இருந்தன. இரண்டும் கலந்த ஒரு 'நிலக்கிழார் ஆளுமை' ஏற்படுகிறது' என்பது வரலாற்றைப் புரட்டிக் கூறுவது. இஃது ஆரியர்கள் பிராமணர்களல்லர் என்பதற்கும், அதன்வழி அவர்களின் குமுகாய ஆளுமையை நயன்மைப்படுத்துவதற்குமே செய்யும் விரகு. இவர்களைத் தாம், நாம் அனும, வீடணப் பிரகலாத, பக்தவச்சலச் சுப்பிரமணிய கண்ண தாசர்கள் என்பதும். மார்க்கியம் படித்த செல்வனும் இவர்களின் வழிச் செல்வது மிக மிக இழிவானது. ஆரியர்களுக்கு ஏரும், எருதும் உரியன என்பதைச் செல்வனால் நிறுவ இயலுமா? இதோ, நமது 'பாவாணரின் அஃகி அகன்ற மொழி நூலாய்வு'.

"ஆரியன் என்னும் சொல்லுக்கு 'உழவன்' என்ற பொருள் கொண்டு, ar—என்னும் இலத்தீன மூலத்தைக் காட்டினார் மாக்சு முல்லர். உழவுத்தொழிலில் முதன்முதலில் சிறந்தவர் 'தமிழர்' ஆதலாலும், ar—என்னும் இலத்தீனச் சொல்லும் ear—என்னும் ஆங்கிலச் சாக்சானியச் சொல்லும், ஏர் என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபாவதையும், வேத ஆரியர் ஆடு, மாடு மேய்க்கும் முல்லை நாகரிக நிலைமையிலிருந்ததும் "ஆரியர் மிலேச்சர்" என்று திவாகரம் கூறுவதையும், உயர் நாகரிகத்திற்கு அடிப்படையான உழவுத் தொழிலுக்கு அநாகரிகர் என்னும் பெயர் பொருந்தாமையாலும் கி.பி.2-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட மனுதரும சாத்திரத்திலும்,

"சிலர் பயிரிடுதலை நல்ல தொழிலென்று நினைக்கிறார்கள். அந்த பிழைப்பு நெறி பெரியோர்களால் நிந்திக்கப்பட்டது. ஏனெனில் இரும்பை முகத்திலே உடைய கலப்பையும், மண்வெட்டியையும், பூமியையும், பூமியிலுண்டான பலப்பல உயிரிகளையும் வெட்டுகிறதன்றோ?" என்று கூறியிருத்தலாலும்; ஏரைக் குறிக்கும் சொல் இந்திய ஆரியத்திலின்மையாலும், ஆரியன் என்னும் பெயர் முதன் முதலில் வேத ஆரியனுக்கே ஏற்பட்டதாகத் தெரிதலானும் அவர் கூற்று பொருந்தாது". செல்வனாரே, அதனடிப்படையிலான உம்முடைய கூற்றும் பொருந்தாது.

—நாம் மேற்கூறிய விளக்கங்கள் அவரது மூன்றாவது கூற்றைத் தகர்த்து எறிந்து விடுவதால். அதற்கு நாம் தனியாக விளக்கம் கொடுக்க வேண்டியதில்லை. (அ) இருப்பினும், அவர் பார்ப்பனர்களும், ஆரியர்களும் வேறு வேறு என்று கூறுவதால் அதை மட்டும் சிறிது விளக்குவோம்.

இத்தவறு 'இரு கண வடிவக் குமுகங்கள் ஒன்று கலந்தன, என்ற தவறான அடிப்படையில் உண்டாவது ஆகும். நிலக்கிழார் ஆளுமையுள்ள திராவிட இனத்தினுள்தான் கண அமைப்பிலுள்ள ஆரியக் குமுகத்தின் கலப்பு நடைபெறுகிறது. இக்கண அமைப்பிலுள்ள ஆரியர்களில் தலைவர்களான ஆரியப் பூசாரிகளே பிராமணர்க

ளாவர். குலத்தலைவர்களும், பூசாரிகளும் தவிரப் பிற ஆரிய இனத்தவர் திராவிடரோடு கலக்கின்றனர். இந்தக் கலப்பு வடக்கில்தான் நிகழ்கிறது. வரலாற்றில் ஆரியத் திராவிடரென காட்டப்படுபவர் அக்கலப்பின மக்கள்தாம். இப்படிக் கலந்துவிட்டவர்கள் மேற்கொண்டும் ஆரியர்களாக இல்லை. எனவே, இப்படிக் கலந்துவிட்ட ஆரியர்கள், சூத்திரர்களாக இருக்கலாம். ஆனால் ஆரியனைத் தவிர வேறு எவரும் பிராமணர்களாகவில்லை.

(க) ஆரியர் வருகைக்கு முன்பு திராவிடப் புலவர்களையும், கல்வியாளர்களையும் அந்தணர், பார்ப்பனர் என்ற சொறகள் குறித்து வந்தன. பின் ஆரியருக்கு உரிமையாயின.

(உ) ஆரியப் பிராமணர் சமயத் துறையிலும். இலக்கியத் துறையிலும். அரசியல் துறையிலும் (அரசருக்கு அறிவுறுத்துபவர் என்ற வகையில்.......(பொன்னியின் செல்வன், அநிருத்த பிரும்மராயரை நினைத்துக்கொள்க) பண்பாட்டுத் துறையிலும் ஆளுமை செலுத்தத் தொடங்கினர்.

(ங) அவரது மொழியான சமசுக்கிருதம், தனது வகுத்த நூல்களை எங்கும் நீட்டிற்று. தமிழ் சமயத்துறையிலும், இலக்கியத் துறையிலும் தன் தலைமையை இழந்தது.

(ச) தமிழரையும், தமிழ் வழித் திராவிடத்தையும் பார்த்துச் செய்யப்பட்ட சமசுக்கிருதம், பிறகு ஆரியப் பிராமணரால் தமிழுக்கும் திராவிடத்துக்கும் மூலமெனக் காட்டப்பட்டது. இவ்வாறே, பிற துறைகளிலும் தமிழிலிருந்து பெறப்பட்டவையெல்லாம் அங்குச் சென்று தமிழுக்கே மூலமாகக் காட்டப்பட்டன. அன்று தொடங்கிய இந்த ஆளுமை இன்றுவரை தொடர்ந்து நீடித்து வருகிறது. (சமசுக்கிருதம் பற்றிய அண்மைச் செய்திகள் தொடக்கத்திலே கூறப்பட்டுள்ளன). ஆரியப் பிராமணன் வடக்கிலும், தெற்கிலும் தானே தலைமை வகுப்பினனாகக் கொண்டு, குறிப்பிட்ட பகுதி என்று வாழாமல் எங்கும் வாழ்வதால் அவனுக்கென்று ஒரு நாட்டைச் சுட்டிக்காட்ட முடியாது. நாடற்ற தன்மை அவனது இனத் தன்மை;

(ஆ) பார்ப்பனர் ஆதிக்கமென்பது இந்தியாவில் எந்தப்பகுதியிலுமில்லையென்று கூறுகிறார் செல்வனார். இதற்கு விடை நாம் கூறியே தீரவேண்டுமா? பெரியார் தமது வாழ்நாள் முழுவதும் தொடுத்த தாக்குதல்கள் அவரே வெறுமனே கற்பனையாய் உண்டாக்கிக்கொண்ட ஆளுமையின் மீதுதானா!

தூங்குபவனைத் தட்டி எழுப்பலாம்; ஆனால் தூங்குவதுபோல் நடிப்பவனைத் தட்டி எழுப்பமுடியாது. அவனை எழுப்பக் கைக்கொள்ள வேண்டிய முறையே வேறு. அவை தாம் 'பெரியாரின் முறைகள்'. செல்வனாரே, பெரியார் முறையில் உம்மை அணுக வேண்டுமா ?

(இ) அடுத்து, 'முதல் குமுகாய ஆரியர்கள்', இரண்டாம் குமுகாய பார்ப்பனர்களல்லர் என்று செல்வனுருக்கு மேலே விளக்கியுள்ளோம். நிலக்கிழார் குமுகாயத்தில்தான் ஆரியர்கள் வந்தார்கள் என்றும், அவ்வாரியரில்தாம் பிராமணர்கள் இருந்தார்கள் என்றும்...எனவே வரலாற்று வளர்ச்சிப் போக்கில் நிலக்கிழார் ஆளுமை மேலும் மேலும் கூர்மையடைய 'பிராமணீயம்', மேலும் பலப்பல 'சாதி'க்ளைத் தோற்றுவிக்கிறது என்றும், இந்தியாவில் நிலக்கிழார் ஆளுமை முற்றிலும் நீங்கி, முதலாளியக்குமுகாயம் வந்துவிடாமல் ஒருபுறத்தில் நிலக்கிழார் ஆளுமை நிலைத்து நிற்க, ஆங்கிலேயர் வருகைக்குப் பின்பு, புதிய முதலாளியம் வளருகிறது என்றும் அப்புதிய முதலாளியத்தில், முதலாளி-தொழிலாளி முரண்பாடுகள் தோன்றி வளர்ந்து வந்துகொண்டிருக்க, நிலாக்கிழார் ஆளுமை முரண்பாடுகள் அப்படியே கெட்டித்து நிற்கிறது என்றும், இந்நிலையில் நிலக்கிழார் ஆளுமை எதிர்ப்புப் போராட்டம் தவிர்க்க முடியாதெனில் 'பார்ப்பனீய' எதிர்ப்புப்போராட்டமும் தொடர்ந்து நடத்தப் படவேண்டியதொன்றே என்றும் அறிந்துகொள்க.

(4) 'கடைசியான குழப்பம்' என்று தில்லி முற்றுளுமை பற்றிக் குறிப்பிட்டு எழுதும் செல்வனுர், அது 'முற்றுளுமை" உடையதா இல்லையா என்பதுபற்றி மேலோட்டமாகவே ஆய்வு செய்கிறுர்; 'தில்லியில் ஓரின ஆதிக்கம் இல்லை' என்றும் கூறுகிறுர். முதலில் 'ஓரின ஆளுமை' பற்றிப் பார்ப்போம். அண்மையில் 'அரசியலாய்வன்' (Statesman) இதழில் வெளிவந்த செய்தி இது.

இந்தியாவில் தாழ்த்தப்பட்டோர் 21·53 விழுக்காடு, ஆனுல் இவர்-கள் அமைச்சரவையிலோ 5% உள்ளனர் அதே சமையத்தில், 17 அரசமைச்சர்களில் 9-பெயர் 'பிராமணர்' [53%], 23 துணையமைச்சர்களில் 10 பெயர் 'பிராமணர்' [44%]. அடுத்து,

தில்லிக்கும் ஒருபடி மேல் என்றுள்ள 'உச்ச அறமன்றம்", தமிழக அரசின் 'பூச்சாற்றிகள்" சட்டத்திலும், 'போற்றி மொழி" பற்றிய சட்டத்திலும் நடந்துகொண்ட நடத்தையறிந்தும், ஓரின ஆளுமையைக் காட்டுமாறு கேட்கும் செல்வனுரை' நினைத்து அழுவதா? சிரிப்பதா?

இனி, தில்லி முற்றுளுமைபற்றிய செய்தியைப் பார்ப்போம். அமெரிக்கா, பிரித்தன் போன்று உலக முற்றுளுமைகளாகத் தில்லிக்கு வாய்ப்பில்லை; ஆனுல் துணைக்கண்ட நிலையில் அஃதொரு முற்றுளுமையே. 'டாட்டா', 'பிர்லா' போன்ற பெரிய வடநாட்டு முதலாளிகளின் கையில் [செல்வனுர் ஒத்துக்கொள்வது]. அதன் ஆட்சி சிக்கிக் கிடப்பது; அரசியல் அதிகாரங்கள் முழுவதும் அதனிடமே குவிந்திருப்பது. [மார்க்கிய இலெனினியத்தின் நாட்டினத் தன்வரையறை உரிமையை (பிரிந்துபோகும் உரிமை உள்ளிட்ட—தேசிய சுயநிர்ணய உரிமையை) கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்]

தமிழினம் உட்பட எந்த ஒரு நாட்டினத்திற்கும் உரிமையுள்ள 'நாட்டின அரசு' ஏற்பட வழி இல்லாமல் அவற்றை அடிமைப்படுத்தி வைத்திருப்பது, சிக்கிம்மை' வலிந்து தன்னுடன் இணைத்துக்கொண்டது [சிக்கிம் தனித்தன்மை காப்பாற்றப்பட வேண்டுமென்று அலறுகின்ற மார்க்கியக் 'கட்சிக்'காரர்களுக்கு தமிழகத்தின் தனித்தன்மை காப்பாற்றப்படவேண்டுமென்பதில் ஏன் அக்கறை இல்லை?]; நேபாளம், பூட்டான் போலும் சிறு அரசுகளை தன் நிலைக்கேற்ப இழுத்தடிப்பது. அந்நாடுகளை 'உதவி' என்ற பெயரில் சுரண்டுவது; 'விடுதலை' வாங்கித்தந்த பெயரில் நாடுகளை [எ.கா: வங்காளம்] அடிப்படுத்துவது, உலக முற்றாளுமைகளான அமெரிக்கா (பழைய), உருசியா (புதிய) ஆகியவற்றிற்கேற்பத் தாளம் போடுவது, அணுவெடி ஆய்வு மூலம் புதிய படை வலிவை உண்டாக்கிக்கொண்டு, அண்டை நாடுகளுக்கும் நாட்டினங்களுக்கும் அச்சத்தை ஏற்படுத்தி வருவது. ஆகிய இவையெல்லாம் 'தில்லி ஒரு முற்றாளுமை" என்பதல்லாது வேறு எதைக் காட்டுகிறது? [எப்படியோ செல்வனார் 'பொருளியல்' நிலைமையில் ஆளுமை இருப்பதாக ஒத்துக்கொள்கிறார். அப்பாடா! இதையாவது ஒத்துக்கொண்டாரே! நம்மை, மறுக்கவேண்டும் என்ற பெயரில் 'ஆரிய ஆளுமை" இல்லை என்று சொன்னதைப்போல் இதையும் சொல்லவில்லையே].

—இம்முற்றாளுமையை எதிர்த்துத் துணைக்கண்ட அனைத்துத் தொழிலாளர்களும், உழவர்களும் ஒன்று சேர்ந்து போராடவேண்டுமென்கிறார். உலக முற்றாளுமைகளான அமெரிக்காவையும், உருசியாவையும். எதிர்த்து, அனைத்து உலகத் தொழிலாளர்கள்தாம் போராடவேண்டும். ஆனால் இம்முற்றாளுமைகளைத் தொலைக்க உலக முழுவதும் ஒரே சமையத்தில் மக்கள் புரட்சி நடத்த வேண்டுமென்றால் அஃது இயலக் கூடியதா? என்ன? அதுபோலத்தான் இருக்கிறது செல்வனாரின் நிலையும்.

தமிழ்நாட்டில் நாட்டின் விடுதலைக்கான போராட்டத்துடன் முற்றாளுமையும், நிலக்கிழார் ஆளுமையும் எதிர்த்து நடத்தும் போராட்டத்தையும், இணைத்து நடத்துவதுதான் நடைமுறைக்கு ஏற்றது. [தொடக்கத்தில் இது விளக்கப்பட்டுள்ளது. இத்தகு போராட்ட அணி தான் 'தமிழக விடுதலை' அணி. 'தமிழக விடுதலை' என்று கூறும் பொழுது துணைக் கண்டத்திலுள்ள எந்த ஓரினத் தொழிலாளியையும் பகைத்துக் கொள்வதன்று. [பார்ப்பனத் தொழிலாளியும் உட்படத்தான்] அவர்களோடு சேர்ந்து நாமும் 'தில்லியை' எதிர்த்துப் போராடுவோம். ஆனால் நம்முடைய தில்லி எதிர்ப்பிலே 'தமிழக விடுதலை முழக்கம்" சேர்ந்திருக்கும். இத் தமிழக விடுதலை இயக்கத்தைச் சரியாக விளங்கிக்கொண்டு, அனைத்துத் தொழிலாளர் இயக்கங்களையும் இதனை ஊக்குவிக்கும்படி கேட்டுக்கொள்வதுடன் உலகப் பாட்டாளி வகுப்பை இம் முழக்கத்திற்கு ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

''பிற நாடுகளை அடக்கி ஆளும் எந்த ஒரு நாடும் உரிமை நாடாக இருக்க முடியாது.''

["No nation Can be free if it oppresses other nations."]

"உலகத் தொழிலாளர்களே! ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்று சேருங்கள்".

['Workers of all Countries and oppressed people unite"]

—Lenin.

பின்குறிப்பு:

தணிகைச் செல்வனாரிடம் தணிக்கை ஆனவை:

(1) நம் 'குமரிக்கண்ட' அடிப்படையைத் தம் கட்டுரையில் மறந்தும் ஓரிடத்திலும் குறிப்பிடாமை.

(2) இங்கு வாழ்ந்த இனத்தை, நாட்டினம் என்று குறுப்பிட்டதை விடுத்து 'ஆரிய-திராவிடக் கணவடிவம்' என்று குறிப்பிட்டமை.

(3) தோழர் தாங்கேயின் நூலைப் பற்றிய குற்றச்சாட்டை மறுக்காமை.

(4) செம்மலராசிரியர் முத்தையா எழுதியிருந்த 'இந்திய தேசியஇனங்களின்' மூலக்கூறு, எது என்ற கேள்விக்கு விடையளிக்காமை;

(5) இலங்கைத் தமிழரைப் பற்றிய ஊமைத்தன்மை.

(6) வையாபுரியின் ஆய்வுகளையே 'பொதுவுடைமைக் கல்வி" எடுத்துக்கொள்கிறது ('ஐயர்' என்ற சொல்) என்பதை மறுக்காமை, ஆகியன அனைத்தும்.

நாட்டினங்களின் தன்வரையறை உரிமை பற்றித் தமது கட்டுரையில் 'செல்வனார்" எங்கும் குறிப்பிடவில்லை. அவரின் மார்க்கியத்தை விளங்கிக் கொள்ளுங்கள்,

இறுதியாக;

தென்மொழிக் கட்டுரையைப் பற்றி எழுத வந்தவர். தென்மொழி, தென்மொழியின் 'வாதம், தென்மொழியின் இனவாதப் பார்வை, தென்மொழியார் என்று தென்மொழியிதழையும். இதழாசிரியரையும் குறிப்பிட்டு எழுதுவது எதை 'அள்ளுவதற்காக" என்பதைச் 'செல்வனாரே' அறிந்து கொள்ளட்டும் என்று விட்டு விடுவோம், 'ஆரிய அடிவருடி' என்ற சொல், முதலாளிகளின் கைக்கூலிகள்' என்பதைப் போன்ற ஒரு திறனாய்வுச் சொல்லே [விமர்சன வார்த்தையே] என்பதையும் நினைவு படுத்திடுவோம்.


## தமிழ்ச்சிட்டு, சென்னை-5.

(தூயதமிழ்ச் சிறுவர் கலையிதழ்.)

| | உள்நாடு | கொழும்பு | பிறவெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 4-00 | 6-00 | 8-00 |
| தனியிதழ் ,, | 0-35 | 0-50 | 0-65 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஓரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் எழுதிக் கேட்க!

# "சேரர் கொற்றம்"

## (தமிழின மேம்படுத்தக் கொள்கை இயக்கம்)

## (அமைப்பாளன்மார்: ம. நி. இன்பன், நீ. நா. இ. மாறன்)

## ஆர்வலர் அழைப்பு

கொற்ற விளக்கம்: இச் "சேரர் கொற்றம்" என்னும் இயக்க அமைப்பின் குறியுங் கொள்கையுஞ் செயற்பாடும் மேலே அடைப்பினுட் காணப்பெறும் விளக்கத் தொடரினுலேயே நன்கினிது விளங்கும். அங்ஙன் விளங்காதாயின், கொற்றவழிச் செயலீடுபாடு மேலுற, மேலுறக் கட்டாயம் விளங்கித் தோன்றும்.

இக் கொற்றத்திற்கு உறுப்பினர் எவருமிரார். அமைப்பாளன்மார் உள்ளடங்க, அனைவரும் ஆர்வலரே. அவ்வப்பொழுது, செயற்பாட்டு நிலைகளைத் தெரியப்படுத்தலும் இயக்குவித்தலும் அமைப்பாளன்மாராலும், அவர் துணைவர் சிலர் பலராலும் செய்யப்பெறும். எனை வகையானும்கொற்றத்தின் முகாமைநோக்கம்,"செயல், செயல், செயலே" உரையாடல் ஊடாடல்களோ, திண்ணைப் பேச்சுகளோ,கூடியமட்டில், அறவுந் தவிர்க்கப்பெற்றுச் செயலீடுபாடே பாராட்டப்பெறும்

நீலமலை, கோவை மாவட்டத் தமிழன்பர் அனைவரும் கண்டிதமாய் ஆர்வலராகச் சேர்ந்து கடனாற்றல் வேண்டும் என உரிமையுடன் வற்புறுத்தி அழைக்கப்பெறுகின்றனர். மற்றை நிலத்தவர்க்கும் விலக்கேதுமில்லை.

கொற்றச் செயல்நிலை: இக் கொற்றத்தின் முதற் செயற்நிலையாக, இதன் "தமிழ்க் காப்பு முன்னணி" இயக்கப் பெறுகின்றது. இம் "முன்னணி"யின் முதற் செயற்பாடாகப், "பெயர்ப் பலகை முழுத் தமிழ்ப்படுத்தம்" எடுத்துக் கொள்ளப் பெறுகின்றது.

செயற்பாடு வருமாறு:—

செயல் நிலை 1. "தமிழ்க்காப்பு முன்னணி":—

செயற் பாடு 1, 5—4—1975, காரி (சனி) முற்பகல்: மாவட்ட ஆட்சியாளரை நேர் காணல், பொருள்: ஆட்சியாளர் அலுவலகப் பெயர்ப்பலகைத் தமிழ்ப்படுத்தம்,

அணிசேர்கை: 5—4—1975, காரி காலை 8-00 மணி அளவில், "என் டி-சி "(கல்வி அகம்) வடகோவை, சிந்தாமணி "சென்டிரல்" திரையரங்கு நடுவில், கோவை-2 என்னும் முகவரியில் —ஆர்வலர் அனைவரும் தவிராமல் தவறுமல் வந்து சேர்ந்திடல் வேண்டும். வருங்கால், தூவெள்ளை வண்ணச் சட்டை,வேட்டி,துண்டோ,சட்டை, காற்சட்டையோ உடுத்தும், உடலிற் பொலிவும் மிடுக்குந் தோன்றவும் வரல் வேண்டும். தவிரேல்! தவறேல்!

இன்னவண்ணம், அன்பன்

ஓ-ம் ம. நி. இன்பன், அமைப்பாளன்.

தொடர்பு கொள்ள:

ம. நி. இன்பன், அமைப்பாளர்—"சேரர் கொற்றம்"
39—தெரு 11, தாட்டாபாத்து, கோவை 641012.

பி.-கு. தென்மொழி, உ. த க, தமிழியக்க அன்பர்கள் ஒவ்வொருவரும் நந்நால்வரை ஆர்வலராய் உடன் கூட்டி வரல்வேண்டும். நால்வர்க்கு மேற்படினும் மிக நல்லதே. ஓ-ம் ம. நி. இ

ளோம். இவற்றை உடனே கலந்து எண்ணிச் செயல்படுத்த வேண்டு கிறேன். —இளங்கதிர், சிற்றம்பலம் (சிதம்பரம்).

**0 : 438:** பேரன்பு சான்ற செந்தமிழ்ச் சான்றீர்! வணக்கம். வாழ்க பல்லூழி! நீண்ட நெடுநாட்களாகத் தங்களின் மனமும் மனம் வழிச் சொல்லும், சொல்வழிச் செயலும், செயலின் முடிவும் ஓரளவு அறிந்து பலகால் மகிழ்ந்தும்; சிலகால் வருந்தியும் வருகின் றேன். வருந்துவதற்கான கரணியங்களையும் அறிவேன். தாங்கள் மொழி, நாடு, இனம் இவை மேற் கொண்ட ஆழ்ந்தகன்ற பற்றும் அப்பற்றின் ஆற்றல் வெளிக்கொணரும் பாக்களும் உரைகளும், தமிழும், நாடும், இனமும் அடிமை கொண்டிருப்பதும், அவ்வடித் தளையை அறவே யகற்ற தாங்கள் தொடர்ந்தாற்றும் கடமைகளையும் தமிழ்த் தேன் சொட்டும் "தென்மொழி" வாயிலாக அறிந்து வரு கின்றேன். இது நாள் வரை "தென்மொழி" உறுப்பினனுகாமைக்குப் பெரிதும் வருந்துகின்றேன். நினைத்ததை உடனுற்றி முடிக்கும் வினைத்திறன் இன்மையே கரணியம். ஆண்டுகள் பல கடந்தும் இப்போதாவது தன்னிகரற்ற தென்மொழியினை யான் பெற முன் வந்துள்ளேன். பொறுத்தருள்க.

—ந. சுப்பையா, ஆசிரியர் - அருமடல், வாலிகண்டபுரம்.

**0 : 439:** பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அவர்கட்கு, வணக் கம். நான், வகுப்பில் 'தென்மொழி' தமிழ்ச்சிட்டு ஆகியவற்றின் சிறப்பினையும், தூய தமிழிலேயே பேசுவதன் இன்றியமையாமை யையும், அவ்வகையில் தமிழுக்குத் தொண்டுசெய்த மறைமலையடி களைப்பற்றியும், இக்கால் தொண்டு செய்துவரும் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களைப்பற்றியும், தங்களைப்பற்றியும் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் எடுத்துக் கூறிவந்தேன். நான் எதிர்பார்த்ததைவிட பிள்ளைகளிடம் மாறுதல் ஏற்பட்டு, என்னிடம் இருக்கும் பழைய 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு'ச் சுவடிகளையெல் லாம் ஒன்றுவிடாமல் வாங்கிச்சென்று, படித்துப் பயனடைவதைக் கண்டு பெருமகிழ்வுற்றேன். கூடிய விரைவில் தாங்கள் நேரில் கூறியபடி தமிழார்வமிக்க மாணவர்களைக் கொண்டு, 'தமிழ் வளர்ச் சிக் கழகம்' என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்திவிடலாமென எண்ணு கிறேன். —புலவர். அ. தங்கவேலு. வாணுபுரம், திருவண்ணுமலை.

**0 : 440:** வணக்கம், நலம். தாங்கள் நலமுடன் வாழ இறை வனை இறைஞ்சுகின்றேன். மேற் படிப்புக்காக பெங்களூரிலிருந்து இங்கு இந்திய தொழில் நுட்பக் கழகத்திற்கு (அய். அய். டி.) வந் துள்ளேன். பயிற்சி முடிய இரண்டு மாதங்கள் உள்ளன. தமிழ் பெயர் மாற்றத்தால் விளையும் நன்மைகளைக் குறித்துப் பாவடிவில் ஆசிரிய வுரையினை எழுதவேண்டுகின்றேன். "தென்மொழி"யில் ஐயம் தெளிய வினு-விடைப் பகுதி இன்றியமையாதது. அடுத்த இதழ் முதல் தொடங்க வேண்டுகிறேன். அண்மையில் 17 அகவை யுள்ள மாணவனைச் சந்தித்தபோது, அவன் மாதம் இருபது ரூபாய் திரைப் படத்திற்குச் செலவழிப்பதாகக் கூறினுன். இவ்வளவு அவர்கள் செலவழிக்க; நான் ஓர் உருபா மட்டுமே "தென்மொழி"க் குச் செலவிடுவது குறைவாயுள்ளது. என்னுடைய தமிழுக்குச் செல விடுவதை உயர்த்தவேனும், இனித் "தென்மொழியை மாதமிருமுறை" இதழாக வெளியிட வேண்டுகின்றேன்.

—பா. திருநாவுக்கரசு, சென்னை-36.

(அடுத்த பக்கம் பார்க்க)

**0 : 441:** ஐயா, நான் பள்ளியிறுதி யாண்டிலே படிக்கும் காலத்தில்கூட உலக வாழ்க்கை என்னென்றறியாது வாழ்ந்தவன். சிறு அகவை முதலே நாள்தோறும் பள்ளிக்குஎல்லோருக்கும்முன்ன தாசுவே செல்லும் பழக்கம் என்னிடமிருந்து வந்தது. பள்ளியிறுதி வகுப்பிலே பயிலும்போது கூட ஏறத்தாழ முக்கால் மணி நேரம் முன்பேசென்று விடுவேன். அப்படி நான் சென்றுகொண்டிருந்த பொழுது ஒருநாள் நடந்த நிகழ்ச்சி இது. எனது வகுப்பறையை யொட்டிய சிறு அறை ஒன்று கீழ்ப்புறம் இருந்தது. அதற்கு வாயில்கள் இரண்டு. ஒன்று எங்கள் வகுப்பறை வழியாகச் செல்வது; மற்றையது நேர் வழி. அன்று நான் வகுப்பறையினுள் நுழைந்தபோழ்து மறு கதவு திறந்திருந்தது. அதன் வழியாகக் கொஞ்சம் புகை வந்துகொண்டிருந்தது. எனவே. அவ்வறைக்குள் சென்றேன். ஒருவருமிலர். ஆனால் ஒரு சிறு கலத்தில் வெந்நீர் காய்ந்து கொண்டிருந்தது. அருகில் சிறு தாள் குவியல். அத்தாள்களினூடே தங்கள் இதழான தென்மொழி சுவடி **6:** ஓலை **11:** நளி-சிலை, தி. பி. **1999** இருக்கக்கண்டேன். உடனே அதை எடுத்து வந்து என் வகுப்பறையில் அமர்ந்து, அட்டை முகப்பில் திருவள்ளுவர் விழாவா, எனத் தலைப்பிட்டு, தாங்கள் ஒரு சிறு பாடல் இயற்றியிருந்தீர்கள். மற்று பின்முன் இல்லாமல் நடுப்பாகம் மட்டும் கொண்ட மற்றோர் இதழ். இரண்டையும் படித்துவிட்டுத்தான் தங்களிடம் தொடர்பு கொண்டேன். தங்களின் தனித்தமிழ் நடையும் மற்ற பிற ஆசிரியர்களின் கட்டுரையையும் படித்ததினால் என் மனத்தில் உவகை மிக, மாதந்தோறும் படிக்கவேண்டுமென விரும்பினேன். எனவே, யாதுமறியாப் பருவத்திலே, நான் வாங்க முற்பட்ட முதலிதழ் தங்கள் இதழ் தென்மொழிதான்.

சென்ற ஓர் இதழில் **'மக்களவை'**ப் பகுதியில் திரு. இறைமகிழ்நன் அவர்கள் தமிழ் மாதங்கள் குறித்து ஓர் ஐயப்பாட்டை எழுப்பி யிருக்கின்றார். எனவே நெடுநாட்களாகக் குழம்பிப்போயிருக்கும் எனக்கும் என் போன்றோர்களுக்காகவும், தாங்கள் தங்கள் இதழில் ஒவ்வோர் ஆண்டு இதழிலும் தென்மொழியில் தமிழாண்டு முறைப்படி நாள்காட்டி வெளியிட்டால் மிகச் சிறப்பாக இருக்கும்.

—சி. முத்துச்சாமி, 3-ஆம் ஆண்டு வணிகம், பொள்ளாச்சி.

**0 : 442:** அன்பமர் ஐயா, வணக்கம்! வழக்காற்றில் (நடைமுறையில்) பல அயல்மொழிச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றிற்குரிய நேர் செந்தமிழ்ச் சொற்கள் யாதெனப் பலருக்கும் தெரியாமலிருக்கலாம். அதுவுமன்றித் தமிழ் இதழ்கள் நடத்தும் அனைவரும் தமிழாய்ந்தாரை வைத்தே நடத்துகின்றனர் என்று கூறவுமியலாது. ஆகவே, தென்மொழி இதழில் இனித் தொடர்ந்து வழக்காற்றில் வழங்கப்படும் அயல் மொழிச் சொற்களுக்கு இனிய செந்தமிழ்ச் சொற்கள் யாதென இதழுக்கு **10** சொற்களேனும் வெளியிடுதல் நன்று.

....புலவர் பூவை. தயாபரன், பூவாளூர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.